புதினப்பத்திரிகையாக
பதிவுசெய்யப்பெற்றது

(1889) [illegible]

இந்து சாதனம்.

THE HINDU ORGAN.

['ரேலிபோன்' இல. 56.]

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஒரு 1-க்கு ரூ. 5-00
இலங்கை, இந்தியா: " ரூ. 8-00
தொலைப்பகுதி: " ரூ. 9.00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்"

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ 10-00
" அரைக்கலம் ரூ. 5-00
" கால்கலம் ரூ. 3-00
அடுத்த முறைகட்கு வேறு விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சஙு. } யாழ்ப்பாணம்;-பிரசோற்பத்திஞு புரட்டாதிமீ உஉ, (1931 ஒக்டோபர் 8உ) வியாழக்கிழமை. { இலக்கம்—உஅ.

உ

கணபதி துணை.

சேர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
செம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
வார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சௌனகத் தினிது துலங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வதிவிச்சை தொழிலென்றேனு
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனிகாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள

கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப் புகழ்பெற்றது. மிக இலேசானது. மலிவானது. ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். காங்கேசன்துறையிலே நவமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.
(Y. 9 8 1—31 12 31.)

ஸ்ரீகதிரைமலைத் திருப்பணி.

கலிவிருத்தம்.

திருமலிந்திடு தென்னிலங்கையின்
மருவுசண்முகன் மலையினன்பணி
புரியவேசிறு பொருள்கள் வேண்டுநீர்
அருளியாங்கவனருள் பெற்றுய்மினே.

தருமசீலர்களே!

உலகிலுள்ள எவ்வகை ஆத்மாக்களுக்கும் தம்முடைய அருட்செல்வத்தை வரையாது கொடுக்கும் வள்ளலாகிய அறுமுகப் பெருமான் கோவில் கொண்டருளிய ஸ்ரீகதிரைமலையிலமைந்திருக்கும் விவேகானந்த மடத்தில் தாகமுற்றடைந்தோர்க்குத் தாக சாந்தி செய்விக்கப்பட்டு வருகிறது. அன்றியும் முன்னே அம்மலைக்குச் செல்வோர்க்கு அதிக கஷ்டத்தை விளைந்த சுற்று வழிகளை நீக்கி இப்போ அதிக சமீபமாகிய வழியைத் திறந்து முந்நூற்றைம்பது படிவரையில்பலபெரியோர்களது முயற்சியினாலும், திரவியோபகார சகாயத்தாலும் செவ்வனே கருங்கற் கட்டிடமாய் கட்டப்பெற்றுள்ளது. எஞ்சிய கருங்கற் கட்டிடத்திருப்பணியைமுற்றுவித்தற்குஇப்போது பொருளுதவிவேண்டும். ஆகையால் பணம் அனுப்புவோர், தெளிவாகத் தங்கள் விலாசத்தை யெழுதி கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—R. சிந்தாமணி அவர்கள்,
கச்சேரி யாழ்ப்பாணம்,
மேற்பார்த்து ரவண சங்கு சாது வசம்
கொடுப்பது.
(H. Y. 9. 8-6&7-12-31)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, கொசஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமூஸ்லி, சப்பேமூஸ்லி, பிஸ்தாசு, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தராசி, கீர்முன்னிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சங்கிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகளுஞ் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் சிறுநீர்க்கழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருடித்தான் உண்டாகியிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம் கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் ரோகங்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை முத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைமுத்தலுக்கு ரூபா ௧0. கால் முத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாவிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.
(Y.75. 31-12-31.)

திறம் கொளுக்கி ஓடுகள்,

மோர்கன், நட்சத்திரம் 14, இஞ்சுப் பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங்கசியா. அண்டப் பார்த்தாப் போலக் கூரையில் அடுக்கலாம். பாரங்குறைவு, பெலனதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

விற்கும் இடங்கள்:—
யாழ்ப்பாணம்:—
மு. இராசேந்திரமப்பர்
கிட்டங்கித்தெரு.
பரித்தித்துறை:—
மு. நமசிவாயம்
கடைத்தெரு.
ஊர்காவற்றுறை:—
கரம்பன்.
திருக்கோணமலை:—S. சின்னையா
வில்லூண்டி.
(H 12. 10-1 32.)

உயர்தரமான தமிழ் நூல்கள்!

தமிழ்புத்தகயாட்லாகு
→ இனம் ←
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4. (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½ (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4 (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக்கதை ரூ. 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும் உரையும் ரூ. 3. (9) நாலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ. 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்

(Y 17 7 9—8 9-32)

Established 1909. **A S. M. A. Khader Brothers**

மருந்தேயாயினும் விருந்தோடுண், என்ற ஔவைப்பிராட்டியாருரைப்படி
இந்த விளம்பர முழுதும் தாங்களும் வாசித்து
தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசித்துக் காண்பியுங்கள்.
குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக்கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லையுயிர்க்கு. (குறள்.)

தன்பமுறுவது நம்முயிரேயாதலால் மூவகைத்தோஷத்தாலும் பிணிவாராதளவில் தடுப்பதற்காகிய நல்லவிதமாகிய அவிழ்தங்களை உண்டவர்களுக்கு பிணிகளால் துன்பமில்லையென திருவள்ளுவநாயனர் கூறிய திருக்குறளைபுணர்ந்த அறிவிற்சிறந்த அன்புடையோரே அருந்தக்கடவீர்களாக.

நாகங் கெட்ட தேகத்தைக் காக்கும்; நாட்பட்டரோகத்தைப் போக்கும்.
உங்கள் பணத்திற்கும் மருந்தின் குணத்திற்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது.
கிகரற்றது! குணமுற்றது!! மகிழ்வுற்றது!!! புகழ்பெற்றது!!!!

ஜீவானந்த தாது விர்த்தி லேகியம்.

ஓ! அன்பர்காள்!! ஒருவனுக்கு வீரியத்தில் ஏதேனும் விகர்ப்பமுண்டாயிருக்கின் அவன் எவ்விதசர்தோஷத்திற்குரியவனுயினும் வீரியக்கெடுதலின் காரணார்த்தமாகவே அவன் மனதிற்கு மேலும் மேலும் விசனத்தைத்தான் உண்டாக்கச்செய்யுமென்பது ஆயுர்வேத சாஸ்திரங்களின் துணிபுர் தவிர, இராஜாங்க வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அதுவே, நபுஸகம், அல்லது பேடித்தனமென்று சொல்லப்படும் அவ்விததுக்ககரமான கொடிய வியாதியை அடியோடுதொலைத்து உலகின் வாழ்க்கையில் என்றுங்காணுத ஆரந்த சுகாதாரவின்பத்தையடையச் செய்விப்பதில் இந்த ஜீவானந்த தாது விர்த்தி லேகியமே மிகவுஞ் சிறந்தது. இந்த லேகியத்தின் முக்கிய குணமாவது: இளமைப் பருவத்தில் பற்பல துர்ச்செய்கைகளினால் நடுப்பிராயத்தில் தேஹபலங்குன்றி நரம்புகள் தளர்வடைந்து இரத்தம் கெட்டுப்போய் சந்தானவிர்த்தியில்லாமல் வயோதிகர்போல் மயங்கிநிற்கும் புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகி பிரமேகச்சூட்டால் நாதமானது ஜலம்போல் நீற்று, கைகாலசதி மலச்சிக்கல், பசியில்லாமை, ஜீரணக்குறைவு, நித்திராபங்கமென்னும்ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், மூளையின்கொதிப்பு கண்ணெரிவு, தேகதனல் இடுப்புவலி, நீர்க்கடுப்பு, நீரெரிச்சல், நீர்சுருக்கு முதலிய சர்வரோய்களையும், நோய்க்குத் தக்கபடி 40, அல்லது 20 நாளில் பூரணமாய் சுகப்படுத்தி, இரத்தத்தை சுத்திசெய்து தங்கள் தங்கள் சுபாவத்திற்கு மேலான வீரியத்தையும், மனவுற்சாகத்தையும் உண்டாக்கி, இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, தேகசக்தி, சந்தானவிர்த்தி, முதலிய நலன்களைச் செய்வதில் இதுவே மேலானதென்றும் கடவுளர்க்குப் பொதுவாய் உறுதியாகச் சொல்லுகின்றோம், அப்படி இதில் சுருக்கமாய் காட்டியுள்ள குணலத்திற்கு மேற்கொண்ட பலனையடையவில்லையென்று கடவுளர்க்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின்பணத்தை உடனே வாபீஸ் செய்விக்கப்படும். அப்படி வேறு கிரயத்தை கொடுக்கத் தவறினால் கோர்ட்டுமூலமாக வசூல் செய்து கொள்ளலாம். மேலும் இம்மருந்தின் குணாலத்தைப்பற்றிச் சந்தேகிக்கிறவர்கள், நமது மருந்தாலயத்திற்கு நேரில்வந்து தங்கள் தங்களுக்குரிய சந்தேகத்தை போதுமானவரைபுமுன்ன நிவாரணைச் செய்துகொண்டு வாங்கலாமென்பதாயும் திண்ணமாய் கூறுகின்றோம்.

40 நாள் 80 வேளை டப்பி 1க்கு கிரயம் ரூ 8 0 0
பரீட்சிக்க 20 நாள் 40வேளை டப்பி 1க்கு ரூ 4 0 0

வி பி தபால் சார்ஜ் பிரத்தியேகம், முற்பணமனுப்பினால் வி. பி. தபால் செலவு இனுமாய் அனுப்பப்படும். பினாங்கு, சிங்கப்பூர், இன்னான், சிறம்பான், கோலாலம்பூர் ஆகிய ஐக்கிய மலாய் நாட்டு வாசர்களும் மருந்தின்கிரயமும் தபால் செலவு ரூ 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந் பெறவேண்டும் வேறு பிறதேசவாசர்கள் அட்வான்ஸ் அனுப்பினால், பாக்கி தொகைக்கும் வி பில் அனுப்புவோம். ஆர்டர் செய்பவர்கள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டெழுத

Our Sole Agent:
P. M. Abdulcader Esqs,
Ceylon Post Agency
No. 105, Piachaud's Lane Maradana,
Colombo, Ceylon.
(Y. 15. 6-7-31—5-7-32.)

எமது விலாசம்:
☞ ஏ. எஸ். எம். ஏ. காதர் பி
கைறுல் முஸ்லிமீன் மெடிக்கல்
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு
இந்திய

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரசோற்பத்திஸு புரட்டாசிமீ உஉ வியாழக்கிழமை.

இங்கே க்ஷேமநிதிச்சாலை வேண்டும்.

யாழ்ப்பாணத்திலே பணத்தோடு ஊடாடுபவர்களும் வியாபாரிமாரும் நகரத்தாரென்று சொல்லப்படும் இங்குள்ள நாட்டுக்கோட்டைச்செட்டிப்பிள்ளைகள் கடைகளிலேயே நீடித்தகாலமாகத் தங்கள் பணத்தை இட்டுங் கடன்பட்டும் கொடுத்தல் வாங்குதல் செய்தும் வந்தார்கள். ஆனால் சில வருடங்களின்முன் செட்டிப்பிள்ளைகளுடைய கடைகள் 'முறிந்து' போய்விட்டமையினால், அவர்களிடத்து நம்பிக்கையில்லையாக, பலர் தம்மிடத்துள்ள பணத்தை ஈட்டிற்குத் தாமே வைத்துக்கொடுத்து விர்த்தி பண்ணி வந்தார்கள். சிலர் இங்கிருந்த மேதர் வங்கியிலும், இன்னுஞ்சிலர் இங்குள்ள ஐக்கியலாபநிதியிலும் பணமிடுதல் கொடுத்தல் வாங்குதல்களைச் செய்துவருவாராயினர். இவற்றுள் மேதர்வங்கியும் சில வாரங்கட்குமுன்னர் முறிந்துபோய்விட்டது. ஐக்கியலாபநிதியொன்றுதான் இப்பொழுது இயன்றவரையில் இங்கே க்ஷேமநிதிச்சாலை போல் இங்குள்ளார்க்கு உதவுகின்றது.

கொழும்புப்பட்டினத்தில் இருக்கும் பணவங்கிகள்போன்ற க்ஷேமநிதிச்சாலையொன்று இங்கு இல்லாமையினாலே இங்குள்ள வியாபாரிமாரும் தனவந்தர்களும் கருமம்பார்க்கும் ஏனையோரும் பெருங்கஷ்டமடைகின்றார்கள். பிறவூரிலிருந்து வரும் "செய்க்" எனப்படும் பண உண்டியலை மாற்றுவதற்கு இங்குள்ளார் படுங்கஷ்டம் பெரிதாகும். எத்தனையோபேர் தாம் பாடுபட்டு உழைத்துக் காலந்தோறும் மிச்சம்பிடித்து வரும் அற்பபொருளை இட்டுவைப்பதற்குப் பணவங்கியொன்றின்மையினால், மோட்டரதம் டஸ் என்னுமிவைகளில் அப்பணத்தையிட்டு ஏதும் இலாபம் பெறமுயன்று இவற்றால் வந்த வெள்ளம் நின்றவெள்ளத்தையுங் கொண்டுபோனவாறாகத் தங்கள் முதற்பணத்தையுமிழந்து கடன்காரராய் ஈற்றில் உண்ண உணவுமின்றி உடுக்கத் துணியுமின்றி இடர்ப்படுகின்றார்கள். அரசினருடைய தபால் வங்கிகளில் உதவப்படும் வட்டி விகிதம்குறைந்ததாதலின் பலர்அதன்கண் பணமிடுவதற்குப் பின்னிற்கின்றார்கள். ஐக்கியநாணயசங்கங்களின் கொடுத்தல் வாங்குதல் முறை உடனுக்குடன் பொருள் இடுவதற்கும் எடுப்பதற்கும் அதிக வசதியற்றனவாதலின் வியாபாரிகள் அவற்றையும் விரும்புகின்றார்களில்லை.

இனி, இலங்கையின் ஏனைய பிரதான பட்டினங்களாகிய கண்டி காலி நுவரேலியா என்னுமிடங்களிற் கிளைவங்கிகள் ஸ்தாபிக்கப்பெற்றுள்ளன. இவற்றால் அவ்வப்பட்டணத்திலுள்ளார் அடையும் நன்மைகள்பல. மேலும் பணவங்கி ஒன்றேனுமிருத்தல் பட்டினத்திற்கு அழகும் பெருமையுமாகும். ஆதலால் கொழும்பிலுள்ள பிரதானபணவங்குகளுளொன்றின் கிளைவங்காக யாழ்ப்பாணத்திலும் ஒருக்ஷேமநிதிச்சாலை திறக்கப்படுதல் அவசியமாகும். இங்ஙனம் திறக்கப்படுமேல் இந்தக்க்ஷேமநிதிச்சாலையில் போதிய கொடுத்தல் வாங்குதல் வியாபாரம் என்னுமிவை நடக்குமென்பது நிச்சயம். இவைமாத்திரமல்லாமல் இன்னுமோரு பெருநன்மையுமுண்டு. இங்கே ஆங்கிலம்படித்து ஸீனியர், ஜூனியர், மற்றிக், எ. எஸ். எல். ஸீ. முதலிய வகுப்புப்பரீட்சைகளிற் சித்திபெற்ற நேர்மையான வாலிபர் பலர் தொழின் முயற்சியில்லாமல் வாளாவிருக்கின்றார்கள். வர்களுட் பலரேனும் சிலரேனும் இப்படி பணநிதிச்சாலையிற் கடைமைபார்த்துப் த்துக்கொள்ளுதலும் முடியும். ஆத ங்குள்ள சனத்தலைவர்களும் ஏனைய ிகளும் வியாபாரிமாரும் யாழ்ப் லே விரைவிலே ஒரு க்ஷேமநிதிச் பத்தாபித்தற்கான மார்க்கத்தைத் ர்களாக.

எங்கும் அப்படி; இங்கு இப்படி.

இப்போதிருக்கும் பணமுட்டுக்காரணமாக உலகத்திலேயுள்ள எல்லா அரசாட்சியாரும் தங்கள் அரசாட்சி வரவுசெலவைச் சரிப்படுத்திக்கொள்ள முடியாது தத்தளிக்கின்றனர். உலகத்திலுள்ள எல்லா அரசாட்சிகளும் இப்படியே தயங்கலாயினர். இப்படியாக முட்டுப்படும் அரசாட்சிகளில் வரவுக்குமிஞ்சிய செலவு ஏற்பட்டிருக்க, வரவுக்குத்தக்க செலவாக்குவதற்கு ஆகவேண்டியன செய்கின்றனர். இதரதேசங்களிலெல்லாம் உத்தியோக வருக்கத்தினருடைய சம்பளங்கள்—தேசாதிபதி முதற்கொண்டு—குறைக்கப்படுகின்றன. குடிவகை, பெற்றோல் அக்கியதேசத்திலிருந்து வரும் ஆடம்பர வாழ்வுப்பொருள்கள் ஆகியவற்றில் பெரும் தீர்வை விதிக்கப்படுகின்றது. இன்னோரன்னவிதமாக வரவுக்குத்தகச் செலவைச்சுருக்கித் தேசத்தைக் கடனில் முழுகவைக்காது காப்பாற்றுவதற்கான செயல்கள் நடைபெறுகின்றன. இவ்வாறே இலங்கையைத் தன்வசப்படுத்தி அரசாட்சிபுரியும் ஆங்கிலநாட்டிலும்நடைபெறுகின்றது. எமது அயல்நாடும், ஆங்கில அதிபத்தியத்தின் கீழ்ப்பட்டதும்-ஆனால் கொஞ்சம் சுதந்திரமுடையதும்—ஆன இந்தியாவிலும் இப்படி நடைபெறுகின்றது. இலங்கையின் முடிவென்ன?

இங்கே சம்பளங்குறைபடப்போவதில்லை. குறைவுபட்டால் உத்தியோகத்தர்களின் சுகவாழ்க்கைகள் என்னபாடுபடும். அவர்களின் டம்பமான சம்பளங்களைக் கொடுத்தே தீரவேண்டுமோம். இனி அரசாங்கசபையென்று ஒரு குறைச்சபை கூடியிருக்கின்றது. இச்சபை உத்தியோகத்தர்களின் சம்பளவிஷயமாக எதுவும் சொல்லக் கூடாது. சொல்ல முடியாது. சொல்லத்தத்துவமில்லை. இலங்கை அரசாட்சி யுத்தியோகத்தர்களின் சம்பளங்கள் அயன் எழுதிய விதியைப்போல அழிக்கொணாத ஸ்திரத்துடன் ஆங்கில அரசனால் அமைக்கப்பட்டது.

இனி இக்குறைச்சபைக்கு அச்சபையிற் தெரிவுபண்ணப்பட்ட மந்திரிமார் எழுவர். இவ்வெழுவரும் இலங்கையின் மந்திரசபையாகும் இச்சபையார் வரவு செலவுத்திட்டம் உண்டாக்கும் கடமையாளர். வரும்படியோ இல்லை. கஜானாவில பணம் கிடையாது. அதிக சம்பளத்தைப்பெறும் உத்தியோகத்தர்களின் சம்பளத்தைப்பற்றிக் கனவு காணவும் கூடாது. பின், பாவம், என்னசெய்வார்கள் ஏதோ மந்திரியாகவும் இருக்கவேண்டும், உலகம் முழுவதும் கேலிபண்ணிய ஒரு கபும்சகத்துவ அரசியலமைப்பையும் அங்கீகரிப்பதாயிற்று, ஆகவே வரவு செலவுத்திட்டம் ஒன்று சமைத்துத்தான் ஆகவேண்டும்.

இவ்வரவுசெலவுத்திட்டம் சமைக்கப்பட்டு செப்டெம்பர்மீ 22உ முதன்முறை சபையில் வாசிக்கப்பட்டது. இரண்டாவது வாசிப்பின்போது, அதுபழையபடி ஆலோசனை செய்து திருத்தப்படுமாறு மந்திரிகளிடம் அனுப்பப்படும்போலிருக்கின்றது. இவ்விதம் அனுப்பப்படுதல் மந்திரிகளின் திறமைக்குறைக்குறியல்ல எது எப்படியிருந்தாலும் அரசியலமைப்புச் சட்டப்படி, டிசம்பர் 22உ க்குள் இத்திட்டம் மூன்றும் முறையும் வாசித்துச் சபையாரால் அங்கீகரிக்கப்படாவிடின் நமது இலங்கைப் 'பாராளுமன்றம்' கலைவுற வேண்டும்.

அப்படிக்கலைவுறுவதற்கு விடுவார்களா? விட்டுவிட்டால் பின் இந்த ஸ்தானங்கள் இப்போதிருப்பவர்கட்கு மீட்டும் தேர்தலில் அகப்படுமா? அகப்படாவிடின் இப்போது நடந்த தேர்தலில் செலவழித்த தொகைகள் பெரும் கஷ்டமாய் விடுமே.

பணத்தைக் கையாளத் தத்துவமற்ற அரசாட்சியும் அரசாட்சியா? இது, வீட்டிலாயினும் சரியே நாட்டிலாயினுஞ் சரியே கபும்சகத்துவ வாழ்வேயாகும்.

உலகம் பலவிதம்.

பூர்வத்திற் சூரபன்மன் எனப்படும் அசுரன அரிபிரமேந்திராதி தேவர்களை வருத்த அவர்கட்குநேர்ந்த இன்னலை நீக்கத் திருவுள்ளங்கொண்டு முருகக்கடவுள் வீரவாகுதேவரைச் சூரபன்மனிடம் தூதாக அனுப்பினர். தூதுசென்ற வீரவாகுதேவரைச் சூரபனமன் நீயார் வந்த காரணமேதெனவினவ,

புரந்தான்குறையயன் முதலமரர்தம்புன்மை
வருந்தம்வானஉர்சிறையெலாநீக்கிமற்றவர்தந்
திருந்தகொல்லிறையுதவலால்செர்நிமாகர்வந்
திருந்தவாதியம்பண்ணஉனடியனேன் யானே.

அதாவது "இந்திரன்முதலிய தேவர்கட்கும் முனிவர்கட்கும் நீ செய்யும் இடரை நீக்கும்படி செந்திமாநகரத்தின்கண்ணே எங்கள் சண்முகத்தெய்வம் வந்திருக்கின்றார். அவருடைய தூதன் யான், உனது நோக்கமென்ன, அமரர் சிறையை விடப்போகின்றனையோ, இல்லை சமர்புரியப்போகின்றனையோ, சொல்லுதி" எனக கேட்டார். அழிவுகாலஞ் சமீபித்தவனாகிய சூரபன்மன் "விண்ணவர் சிறையை விடுகிலேன், போர் புரிவேன்" என்று கூறித் தூதாக வந்த வீரவாகுதேவர்க்கும் இடர் செய்ய முயன்றான்; ஆனால் வாய்க்கவில்லை. சூரபனமன முதலாம் அசுரர் கதி என்னவாயிற்றென்பதை எவருமறிவர்.

* *

ஸ்ரீ ராமசுவாமியிடமிருந்து இலங்கைக்குத் தூதுவந்த அநுமாரை இராவணன அவமதித்துக் கொல்லநினைத்தான்; அநுமார் இராவணன்முதலாம் அரக்கருக்கெல்லாம் ஒருவாறு தப்பி விஜயத்தோடு இராமசுவாமியிடம் மீண்டார். பின்னர் வாலியின் மகனாகிய அங்கதன் இராவணனிடந் தூதுசென்றபோது இராவணன் அங்கதனைத் தன்வசமாக்க முயன்றான. அங்கதன் அதற்கு இடங்கொடாது தான் சென்ற கருமத்தைசசெய்துவிட்டு வெற்றியுடன் மீண்டான்.

* *

பஞ்சபாண்டவர்பொருட்டுக் கிருஷ்ண பரமாத்மா நாகக்கொடியோனிடத் தூது சென்றார். சகுனி சொற்கேட்டு வணங்கா முடியோன் அவரை உபசரிப்பதை விடுத்து அவமதித்தான். கண்ணபிரான் அதனைப் பொருட்படுத்தினாரல்லர். துரியோதனன் மாயவனை நோக்கி, "நீ வந்த நோக்கம் என்ன" எனக்கேட்க,

"குநினல்அரசிழந்தகின் துணைவர்
சொன்னசொல்லும்வழுவாதபோய்
வதிலார்கவனைமொர்துதண்ணிழல்
இலாதகானினிடையெய்தியும்
திதிலாவகைகுறித்த நன்பல
கழித்துவந்தனர்செகத்தினிற்
கோதிலாதகுருகுலமகீப அவர்
உரிமைநண்பொடுகொடுத்தியே."

என்று விடையிறுத்தார் உலுத்தனாகிய துரியோதனன் பரமாத்மாவின் நீதியான வேண்டுகோளுக்கு உடன்பட மறுத்தது மாத்திரமல்லாமல், பொறிப்பக் தரிட்டு அவரை அகப்படுத்தவும் நினைந்தான். மாயவனை அன்பினால் அகப்படுத்துவதேயல்லாமல் வஞ்சனையினால் அகப்படுத்த முடியுமோ; முடியாது. மேலும் "நீ பாரத அமரில் யாவரையும் நீறுங்கி—பூபாரந் தீர்க்கப் புகுந்தாய் புல்வண்ணு" என்ற பிரகாரம் பாரதப்போர் நடக்கவேண்டுமென்னும் நோக்கத்துடன் கிருஷ்ணமூர்த்தி உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று கூறித் தூது சென்றமையினால் சமாதானம் ஏற்படவில்லை.

* *

இப்பொழுது பாரதநாட்டின்பொருட்டு மஹாத்மா பிரித்தானிய அரசினரிடந் தூது சென்றிருக்கின்றார். கிருஷ்ணபரமாத்மாவைப்போலன்றி இந்த மகாத்மா பாரதநாட்டிற்குச் சுவதந்திரம் வேண்டுமென்று மனம் வாக்குக் காயம் ஒத்துச் சென்றிருக்கின்றார். முன்னே தூதாகச் சென்ற வீரவாகுதேவர் அநுமன் அங்கதன் கண்ணபிரான் எல்லாருக்கும் சென்றவிடத்தில் அபசாரமே நடக்க இப்பொழுது மகாத்மாவிற்கெனிலோ சென்றவிடமெல்லாம் உபசாரமே கிடைக்கின்றது. துரியோதனனுக்குச் சகுனி இடையூறாய் நேர்ந்தவாறு பிரித்தானிய அரசினருக்கு இடையூறாய்நேர்ந்த உவின்ஸ்ரன் சேர்ச்சிலும் மகாத்மாவை உபசரிப்பாராயினர். நல்லார்க்கு இல்லைப் பகை என்றவாறு மகாத்மாவிற்கு அங்கே பகையில்லை யெனலாம். முன் எவருக்குமில்லாத உபசாரம் இங்கிலாந்தில் இப்பொழுது மகாத்மாவிற்கு நடக்கிறதென்று சொல்லலாம். மகாத்மாவின் நீதியான கேள்விகட்கு பிரித்தானியர் இசைவரேல் அவர்கள் நீங்காப்புகழையும் புண்ணியத்தையும் பெறுவர். மகமதியர் ஐக்கியப்படுவரேல் அழியா நன்மைகளையடைவர்.

நீதிஸ்தலத்தில் சுதேச உடை.

கொழும்பிலேயுள்ள பிறக்டர்கள் சிலர், தாம் நீதிஸ்தலங்களில் சுதேச உடை தரிப்பதற்கு உத்தரவுதரவேண்டுமென்று அற்றோணிஜெனறலிடம் மனுப்பண்ணி யிருந்தனர். அதற்கு மறுமொழியாக அற்றோணி ஜெனறல்; அப்புக்காத்துமார் சங்கம் செய்த தீர்மானத்தை யனுப்பியுள்ளார்.

பொலிஸ் நீதிபதிகள் கோட்டிலே சட்ட ரீதியான உடை தரித்து இருப்பது வழக்கமல்லவாயிருப்பதினால் அப்புக்காத்துமார் சட்டரீதியான உடை தரிக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அல்லாமலும் எதும் ஒரு விதமான குறித்த உடைதான அணியவேண்டுமென்ற நிபந்தனையும் அவசியமின்று. ஆனால் ஒரு நீதிபதி கறுத்தச் சட்டை யணிந்துகொண்டு நீதாசனம் வகித்தால் அப்புக்காத்துமாரும் அப்படியே செய்வதுதான் முறைமையும் உபசாரமும் ஆன செய்கையாகும்.

நம் பக்கத்தின் 1-ம் பந்தியின் தொடர்.

ஸ்ரீ தியாகராஜசுவாமிகள் திவ்வியசரிதம்.

இத்தலைநாமங்கொண்ட ஒரு சிறு நூல் எமது பார்வைக் கனுப்பப்பட்டுள்ளது. இதன் ஆக்கியோன்மாகதை ஸ்ரீ சா. கிருஷ்ணையரவர்கள். பிரசுரநிலையம ஸ்ரீகிருஷ்ணா பப்ளிஷிங் ஹவுஸ், மயிலாப்பூர், சென்னை. இதன் விலை அணா 8. சர்வ சுதந்தரங்களும பிரசுரகர்த்தாக்கட்கே யுடைய இச்சிறு நூலிலே இதன ஆக்கியோன், இன்னும் என்றும் தம் பெருமை குன்றாத தியாகராச கீர்த்தனங்கள என்று சங்கீத வல்லுநர்களினாற் பெரிதும் போற்றப்படுவனவும், கேட்போர்கட்குத் தெவிட்டாத இன்பத்தைத் தருவனவுமான கீர்த்தனங்களைச் சங்கீத உலகத்திற் கமுதம்போல அளித்து அநேக அபூர்வ ராகங்கள் இறக்துபட்டழியாவண்ணம் கீர்த்தனங்களில் அமைத்துவைத்து சங்கீதத்திற்கு உயிர் கொடுததருளி, ஸ்ரீராமப்பரமத்தின் அநுக்கிரகபெருக திருவருளையும் கிரமப்பெற்ற ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் சிவிய சரித்திரத்தைக் கூறியிருக்கின்றார்.

மேற்படி பிரசுர கர்த்தாக்கள் எமக்கனுப்பிய பிரதிகளுக்கு நாம் ஸ்துதி கூறுகின்றேம.

வடஇலங்கைத் தேசியமகாசபை ஸ்தாபனம்.

தலைவர்: கௌரவ ஸ்ரீமான் வை. துரைசுவாமி அவர்கள்.

பிரேரித்தவர்: திரு V. S. கார்த்திகேசு அவர்கள். அனுவதித்தவர் திரு T. N. சுப்பையா அவர்கள்.

உபதலைவர்கள்: திருவாளர்கள்: R. சிவகுருநாதர், S. இராசரத்தினம், J. V. செல்லையா, T. R. நல்லையா, R. கந்தையா, A. அப்பாத்துரை அவர்கள்.

பிரேரித்தவர்: திரு A. M. புறாடி அவர்கள். அனுவதித்தவர்: திரு K. நேசையா அவர்கள். செயலாளர்கள்: திருவாளர்கள்: T. N. சுப்பையா, T. இராசரத்தினம் அவர்கள்.

பிரேரித்தவர்: திரு S. H. பேரின்பநாயகம் அவர்கள். அனுவதித்தவர்: திரு M. S. இளையதம்பி அவர்கள்.

பண வைப்பாளர்கள்: திருவாளர்கள்: S. சிவபாதசுந்தரம், K. நவரத்தினம் அவர்கள்.

பிரேரித்தவர்: திரு T. C. இராசரத்தினம் அவர்கள்: அனுவதித்தவா: திரு N. பொன்னையா அவர்கள்.

நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள்: C. செல்லையாபிள்ளை, K. முத்துக்குமாரு S. சுவாமிநாதன், S. நடேசபிள்ளை, M. S. இராசரத்தினம், M. S. இளையதம்பி, S. பேரின்பநாயகம், A. E. தம்பர், C. அருணம்பலம், T. சின்னத்தம்பி, அல்விறெட் சுவாம்பிள்ளை A. M. புறாடி, K. ஐயாத்துரை, J. T. கென்ஸ்மன், V. பசுபதிப்பிள்ளை, K. நேசைய, N. பொன்னையா, T. முத்துச்சாமிப்பிள்ளை, K. C நாதன், C. வைமல்வாகனம், சுல்தான் மொய்தீன், என்பவர்களாவர். (ஏனையோர் பின்னர் தெரிவு பெறுவர்)

பிரேரித்தவர்: திரு T. N. சுப்பையா அவர்கள். அனுவதித்தவர் திரு R. C. மன்னவராயன.

யாழ்ப்பாணப் புகைரதஸ்தானம்.

இந்த ஸ்தானத்தின் அதிகாரத் தலைவராக இதுகாறும் பிரதியுத்தியோகம் வகித்திருந்த ஸ்ரீ V. முத்துத்தம்பி அவர்கள் சென்ற ஜூலை மாசம் முதற்கொண்டு ஸ்திரமான தலைவராக நியமனம் பெற்றனர்.

இவ்வுத்தியோக நிலயத்தில் இவருக்குமுன் இருந்த தலைவர்களைப்போல இவருஞ் சனங்கள் மீது தயை முதலிய சுகுணங்களைக் காட்டி பெரியவர் சிறியவர் என்ற பேதம் பாராது அங்கு வேலையாகச் செல்லும் எவரிடத்தும் ஒரேவிதமான சிரத்தையான கவலைகொண்டு நீண்டகாலம் சுகமே வாழ வேண்டுமெனக் கோருகின்றேம்.

நூல்களைப்பற்றிய குறிப்பு.

சுகுணவதி அல்லது மனம்போல மாங்கல்யம்:—என்ற இக்கவினகதை மாக்கை ஸ்ரீ சா. கிருஷ்ணையரவர்களால் எழுதப்பட்டதாகும். இக்கவினத்தின்கண் மெய்க்காதல், கல்லேசரியல்பு, தீயோர் திறம் முதலானவைகளெல்லாம் உதாரணமுகத்தான் இனிது விளக்கப்பட்டுள்ளன. படிப்போர் உள்ளத்தைக் கவருஞ் சித்திரங்கள் சில இந்நூலகத்து இடையிடையே விரவியுள்ளன. இக்கதை ஆண்பாலார் பெண்பாலாரென்ற பேதமின்றி யாவரும் ஆர்வத்துடன் படிக்கத்தக்க விதமாக இலகுவான தமிழ்வசன நடையில் எழுதப்பெற்றுள்ளது. 170 பக்கங்கள் வரையிற் கொண்டதாய்க் கொக்கிறகு போன்ற வெண்ணிறத்தாளில் அழகுற அச்சிடப்பெற்றுள்ளது. பிரதியொன்றன் விலை ரூபா 1. பிரதிகள் ஸ்ரீ கிருஷ்ணாப்பளிஷிங்ஹவுஸ், மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிப்பெறற்பாலன.

பாலவிநோத கதாமாலை முதற்பாகம்:—இது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியருள் ஒருவராகிய ஸ்ரீ ஆ வி. சோமசுந்தரமவர்களால் தமிழ்க்கல்வி பயிலுங் குழந்தைகட்குப் பயன்படும் வண்ணம் புதிய முறையில் எழுதப்பெற்றது. கதைகள் சித்திரசகிதமாக விளக்கப்பட்டுள்ளன. இப்புத்தகம் குழந்தைகள் பயில்வதற்குப் பெரிதும் பயன்படுமென்பது எமது அபிப்பிராயம். பிரதியொன்றின் விலை சதம் 15 (2½ அணா) பிரதிகள் இங்குள்ள புத்தகசாலைகளிற் பெறற்பாலன.

சமாசாரத் திரட்டு.

வௌவால் வேட்டையிற் சுடப்பட்டான்:—குருநாக்கலைச்சேர்ந்த நலாயுல்லா என்னுமிடத்தில் இருவாலிபர் வௌவால் பிடிக்கும்படியாக, மரத்திலேறிப்பதுங்கியிருந்தபோது வேட்டைக்குச் சென்றவர் யாரோ அந்த வாலிபருள் ஒருவனைச்சுட அவன் உடனே நிலத்தில் வீழ்ந்து இறந்தானும். சுட்டவன் இன்னானெனத் தெரியவில்லையாம்.

உத்தியோக உயர்வு:—இதுகாறும் கொழும்புப் பகுதியில் உதவி வித்தியாதரிசியாய் உத்தியோகம் நடாத்திவந்த ஸ்ரீமான் F. S. இளையதம்பியவர்கள், இம்மாச முடிவோடு உத்தியோகத்தினின்றும் இளைப்பாற வெண்ணியிருக்க, வித்தியாபகுதியார் அவர்திறமையை மதித்து, பகுதி வித்தியாதரிசியாய் நியமனஞ் செய்திருக்கின்றனர். —— கடித.

10 வயதுச்சிறுவன் 5 வயதுக் குழந்தையைக் கொன்றமை:—மாத்தறையைச்சேர்ந்த பத்தக்கமா என்னுமிடத்தில் 5 வயசுள்ள சிறுவனொருவன் பயிர்க் காவலுக்காக வயலுக்குப் போயிருந்தபோது அங்கே வந்த 10 வயதுச் சிறுவனுக்கும் இவனுக்குமிடையிற் சண்டை மூண்டுவிட, பெரியவன் சிறியவனைச் சேற்றில் முகங்குப்புறத் தள்ளிவீழ்த்தி அவனுயிர் நீங்கும் வரையுங் கழுத்தை அமத்திப் பிடித்துக் கொண்டானும். கொலைசெய்த சிறுவன் விளக்கமறியலிலிருக்கின்றான்.

திருக்கோணமலை மாதர் ஐக்கிய சங்கம்:—நிகழும் பிரசோற்பத்தி௵ புரட்டாதித்திங்கள் ௧௨ (27-9-31) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் சைவ ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் மேற்படி சங்கச் செயலாளரின் கேள்விப்படி, ப்ரம்மஸ்ரீ சிவ பஞ்சாட்சரக்குருக்கள் அவர்களால் 'சைவசமயத்தின் தற்காலநிலை' என்னும் பொருள்பற்றி, ஓர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அத்தருணம் ஸ்ரீமதி: அ. விசாலாட்சிப் பிள்ளையாலும், ஸ்ரீமதி: கா. நீலாயதாட்சியாலும் குறிப்புரை கூறப்பட்டபின் 8 மணியளவில் தேவார பாராயணத்தோடு சபை சமாப்தியாயிற்று. கடித.

வயாவிளான் பாலர் ஞான போதனா சங்கம்:—இச்சங்க ஆதரவில், நிகழும் பிரசோற்பத்தி௵ புரட்டாதி௴ ௧௨ (27-9-31) ஞாயிற்றுக்கிழமை இரவு 7-15 மணியளவில், "சுதேசநாட்டியம்" பத்திராதிபர் ஸ்ரீ, சி. நல்லதம்பி அவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ், பரமேஸ்வராக் கல்லூரித்தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ நவநீத கிருஷ்ண பாரதியாரவர்களாலும், கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. வே. மகாலிங்கசிவம் அவர்களாலும், "கிராம முன்னேற்றம்" என்னும் விஷயமாகக் கேட்போர் ஆனந்திக்கும்படி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. பின்னர், சங்கத்தாரின் வந்தனத்துடனும் அக்கிராசனரின் முடிவுரையுடனும் கூட்டம் 9-30 மணியளவில் முடிவெய்தியது. இச்சங்கம் மேன்மேலும் ஓங்கிவளர எல்லாம் வல்ல இறைவன் திருவருள் முன்னிற்பதாக. கடித.

கடிதற்கு விஞ்ஞாபனம்.

செ. பெருமையினூர்—விக்டோறியாக் கல்லூரி--தொல்புரம்—பத்திரிகையிற் பிரசுரம் பெறுவதற்கென எழுதப்பெறும் விஷயங்கள் கடதாசியின் ஒருபக்கத்தில் எழுதப்படவேண்டும். விஷயத்தை விளக்கத்துடன் சுருக்கமாக எழுதுவது நன்று. நீண்டவியாசங்கள் இடம் கிடைக்கும்வரையிற் பின்போடப்படும் அல்லது பாகம்பாகமாகப் பிரசுரத் பெறுவதாகும். இப்படியாகில் விஷயத்தின் கருத்து வாசகர்களுக்கு ஒன்றுபட்டுப் புலப்படுவது தவறும்.

கடலில் அமிழ்ந்தியிறந்தான்.

சென்றவாரம் கொழும்புத்துறையில் வசித்த ஆறுமுகம் முருகன் என்பவன் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றவன் மீண்டுவரவில்லை. பின்னர் கடலில் அவனைத்தேடியபோது அவனுடைய பிரேதமும் வள்ளமும் அரியாலைக் கடற்கரைக் கணித்தாகக் காணப்பட்டன. விசாரணையில் அவனுக்கு நீந்தத் தெரியாதென்றும் வள்ளங் கவிழ்ந்தமையினாலேயே மரணம் நேர்ந்திருக்கவேண்டுமென்றுஞ் சொல்லப்பட்டது.

தேகவியோகம்.

காவேட்டி வாசரும் திருக்கோணமலையைச் சேர்ந்த தோப்பூர் அரசினர் பாடசாலைத் தலைமையாசிரியரும் ஆகிய ஸ்ரீமான் வீ வேலுப்பிள்ளை அவர்களின் பிரியபத்தினி ஸ்ரீமதி. இலக்குமிப்பிள்ளையம்மா தமது 26-வது வயதில் பிரசவத்திலுண்டான நோய் காரணமாகப் புருசன் புத்திரர் முதலாயினரைப் பரிதபிக்க விட்டுச் சிவலோகப் பிராப்தியெய்தியமை மிகவுந் துன்பத்துக்கிடமாயிற்று. என் செய்வாம். இவளையிழந்து துன்புறும் புருஷன் புத்திரர் முதலாயினரைப் பரங்கருணைத்தடங்கடலாகிய இறைவன் இரட்சித்துக் காப்பாற்றும் படி வேண்டுகின்றோம்.

கடித.

தந்திச்செய்தி.

லண்டன் 4-10-31.

சென்றவாரத்தின் அறிக்கைப்படி பிரான்ஸ் தேசத்தில் 475000000 தங்கப்பவுண் பெறுமதியான பொன் இருப்பதென அறியக் கிடக்கின்றதென்றும், இன்னும் பொன் அங்கு சென்றுகொண்டேயிருக்கின்றது. இன்று 15 டன் நிறையுள்ள பொன் இறக்குமதி செய்யப்பட்டது. நாளைக்கும் ஒருபெரும் நிறையுள்ள தங்கம் இறக்குமதி பண்ணப்படும்.

அமெரிக்காவும் பிரான்ஸ்தேசமும் தங்களிடத்தே 1175000000 தங்கப்பவுண் பெறுமதியான தங்கத்தை இப்பொழுது சேகரித்து வைத்திருக்கின்றன.

புச்சாறஸ்ற் 3-10-31

சமான்தா பிரேஸ்கு என்னும் மாது ஒரு ஆகாயக்கப்பலின்மேல் மூன்றேமுக்கால் மைலுக்கு ஏறிச்சென்று அங்கிருந்து ஒரு சத்திரயந்திர (பெரியகுடை) த்தைப் பிடித்துக்கொண்டு குதித்தனள். அவர் பூமியை வந்துசேர்வதற்கு முன் ஆறேகால் மைல்வரையில் அக்குடையிலே தொங்கிக்கொண்டு மெல்லமெல்லக் காற்றுடன் சென்று சென்று இறங்கினள்.

லண்டன் 3-10-31.

இலங்கையின் பெரிய தேயிலைத்தோட்டக்காரனாகவிருந்த சேர். தொமஸ் லிப்டன் இறந்துவிட்டனர். அவருடன் கூட இங்கிலாந்திலிருந்த சிங்களவேலைக்காரன் ஆற்றொணாத் துயருற்றவனாய் அங்கிருக்க மறுத்து இலங்கைக்கு வருகின்றானாம்.

பாராளுமன்றம் கலைவுறும்

லண்டன் 5-10-31

சேர் ஹேர்பேட் சாமுவல், லோட் றீடிங் ஆகிய இருவரும் உட்பட அரசரின் மஹாமந்திரசபை கூடி 2மணிநேரம் ஆலோசனைசெய்து ஈற்றின் ஒரு உடன்பாடு எய்தினர்.

உடனே ஒரு பொதுத்தேர்தல் நடைபெற வேண்டுமென மந்திரசபை முடிவுகொண்டது. இது முதன்மந்திரியார் வெளியிடும் ஒரு விஞ்ஞாபனத்தின்படியானதாகவே யிருக்கும்.

இவ்விஞ்ஞாபனம் விடுகிற வகையில் முதன்மந்திரியாருக்கு சர்வசுதந்தரம் கொடுபட்டிருக்கின்றதென அறியக்கிடக்கின்றது.

மிஸ்டர் மாக்டொனல்ட் அரசரைச் சந்திப்பதற்கு முன் எவ்வித உறுதி அறிவிப்பும் செய்ய முடியாது. புதன் கிழமைக்கு முன், பாராளுமன்றத்துப் பொதுஜனசபையிலே எவ்வித அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

காஸ்மீரத்தில் மன்னிப்பு.

ஸ்ரீநகர் 5-10-31

மஹாராசாவின் 36-வது பிறந்தநாட் கொண்டாட்டத்தில் நடந்த விழாவின்போது மஹாராஜா தமது நாட்டிலே இராசீய கைதிகளாயுள்ளாரெல்லாரையும் விடுதலை செய்ததுமன்றி, பொலிசாருக்கும், இராணுவத்தாருக்கும்விசேடத்துவங்களை யளித்திருந்த சட்டத்தையும் மீட்டுக்கொண்டனர். சனங்கள் சந்தோஷங் கொண்டாடினார்கள்.

இந்தியச் செய்தி.

கன்றபெரியில் மஹாத்மா

லண்டன்: 4-10-31.

கன்றபெரிதேவாலயத்திலே அங்குள்ள குருவுக்கருகிலே காந்திஜீ உட்கார்ந்திருந்து ஆராதனை முடிந்தபிறகு குருவானவருடைய வாசஸ்தானத்திற்குச் சென்று தங்கினர். சாயந்தரம் 3 மணிக்கு அவருடைய மௌன விரதம் ஆரம்பித்தது.

குருவானவருடன் நெடுநேரம் காந்திஜீ பேசிக்கொண்டிருந்தார். அவர் அமைதியாக மிச்சநேரத்தைப் போக்கினர். அவருக்குத் தேக ஆறுதல் மிகத் தேவைப்பட்டிருக்கின்றது. இப்போது லண்டனிலே நடைபெறும் வேலை அவருடைய தேகத்திற்கு மிக இளைப்பைக் கொடுக்கின்றமையால் அவரை ஆறுதலாக இருக்கும்படியானவசதிகள் தேடப்படுகின்றன.

காந்திஜீயில் மிகவும் ஆர்வமுடையவர்கள் நாள் முழுதும் குருவானவர் வீட்டைச் சுற்றிநின்றனர்.

மீராபாயும் மற்றும் அவருடைய காரியதரிசிகள் யாவரும் அவருடன் இருக்கின்றனர். ஜோன்சன் குருவானவர்வீட்டிலே மற்றுங் குருவானவர்களைச் சந்திப்பதே அவருடைய இன்றையவேலையாகும். மிஸ்டர் C. F. அண்ட்றூஸ், குருவானவர்வீட்டிலே தங்கியிருக்கின்றனர்.

நேற்றுப்பின்னேரம் மஹாத்மா, சேர் முகம்மது ஷாவ்வி, மிஸ்டர் ஜின்னா ஆகியவர்களுடன் தற்போதைய நிலைமையைப் பற்றி அளவளாவினர். இங்கு நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி ஒன்றுமதெரியவில்லை. ஆனால் சமரசமுடிவு எட்டியெட்டிப் போகின்றதென்றும், இப்பிரச்சினையை லோட் ஷாங்கி போன்ற ஒருவரிடம் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட மத்தியஸ்தரிடம் மத்தியஸ்த தீர்வைக்கு வைக்கவேண்டுமென்ற உணர்ச்சி வலுவடைகின்றது.

சேர் ஜோன் சைமன் ஆகாயவசனிப் பிரசாரம்.

லண்டன்: 4-10-31.

இந்திய பிரச்சினைகளைப்பற்றி சேர் ஜோன் சைமன் இன்று ஆகாயவசனிமூலமாக அமெரிக்காவுக்கு ஒரு உபந்நியாசம் செய்தனர். அதில், இந்து-முஸ்லீம் ஒற்றுமையை வேறுயாரும் உண்டாக்குவதேயானால் அது நிலைபேறற்றதாயும் பிரதிகூலமுற்றதாயும் இருக்குமென்றனர். அவ்விருபாலாருக்குமிடையில் ஒரு ஒற்றுமை நிகழ்வதே நல்ல அஸ்திவாரமாயிருக்கும்.

அவர், சிற்றரசர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் முதலியோருடைய பிரச்சினைகளைப் பிரதிபாதித்து, இந்தியா வ. மே. ச. வுக்கு ஒரே தன்மையான ஒரு பிரச்சினையைச் சமர்ப்பிக்கவில்லையென்றும், அநேகவிதமான இடருள்ள பிரச்சினைகளைச் சமர்ப்பித்திருக்கின்றதென்றும், இதனாலே இந்தியாவினுடைய சொந்தநலத்தை உத்தேசித்து பிரித்தானியாவின் சிநேகபாவமான இராசீயக் கூட்டுறவு இன்றியமையாததென்றும் கூறினர்.

லண்டன் "ஒப்சேவர்"பத்திரிகையின் அபிப்பிராயம்.

லண்டன்: 4-10-31.

இந்து - முஸ்லிம் தகராறு இணக்கமடையும் வரையும், இணக்கமடைந்தாலொழிய, மற்றைப் பிரச்சினைகளைப்பற்றியாலோசித்தல் வீண்-என்றுகூறுகின்றது.

சிறுச்சிறு கூட்டங்கள்.

லண்டன்: 4-10-31.

வகுப்புவாரிப்பிரச்சினை விசாரணைச்சங்கம் நேற்று முன்னேரத்திலே கலைவுற்றதாயினும் எல்லாக்கட்சியிலுமுள்ள தலைவர்களும் அந்தரங்கமாக அளவளாவி இப்பிணக்கை யிணக்குவதற்கான புதிய வழிகள் இருக்கின்றனவோவெனத் தேடுகின்றனர்.

மிஸ்டர். சாஸ்திரி, சேர். சப்புறு, மிஸ்டர். ஜெயக்கார், பண்டித மாளவையா ஆகியவர்களுடன் மஹாத்மா கலந்துபேசினர். இக்கூட்டத்தில் விதல்பாய் படேலும் இருந்தனர்.

பிரார்த்தனையின் அவசியம்.

"ஒரு சால்வையின் விலை 700 ரூபாய்."

"எஸ். எஸ். இராஜபுதானா" கப்பலில் சில சம்பவங்கள்.

காந்தியடிகளின் பிரயாணத்தின் போது "எஸ் எஸ். இராசபுதானா" கப்பலில் நடைபெற்ற சில சம்பவங்களைப்பற்றி ஸ்ரீமான் மகாதேவ தேசாய் தொடர்ச்சியாகச் சில கட்டுரைகள் "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதிவருகிறார். முதல் கட்டுரை சென்றவாரவில வெளியிடப்பட்டது. இரண்டாவது கட்டுரையின் முக்கிய பாகம் வருமாறு:—

மார்க்கோனியின் கம்பியில்லாத் தந்தி முறையினால், உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் எங்களுக்குச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அது மாத்திரமல்ல, கடலில் ஆங்காங்குச் சென்றுகொண்டிருக்கும் பல கப்பல்களிலிருந்தும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. பெர்பரா என்ற இடத்திலுள்ள இந்தியர்களிடமிருந்து எங்களுக்கு ஒரு செய்தி வந்தது. இந்த பெர்பரா என்பது ஒரு கப்பல் என்றே முதலில் நாங்கள் கருதினோம். ஆனால் பின்னர் பரிசீலனை செய்து பார்த்ததில், ஏடன் வளைகுடாவுக்குத் தெற்கேயிருக்கும் பிரிட்டிஷ் சோமாலிலாண்டின் முக்கிய பட்டணம் இது என்று தெரிந்துகொண்டோம். இப்பொழுது நாங்கள் சூயஸ் வாய்க்காலுக்கு அருகாமையில் வந்துகொண்டிருக்கிறோம். எனவே செய்ரோவிலுள்ள இந்தியர்களிடமிருந்தும் எகிப்தியர்களிடமிருந்தும் செய்திகள் வந்தவண்ணமாயிருந்தன.

கப்பலில் எங்களுக்கு முக்கிய நண்பர்களாயிருக்கப்பட்டவர்கள இங்கிலீஷ் பிரயாணிகளின் சிறு குழந்தைகளேயாகும். குழந்தைகளுக்கு நிறவேற்றுமை முதலிய ஒன்றுந் தெரிவதில்லை. இக்குழந்தைகள், காந்தியடிகளுடன் மிக அன்பாகப் பழகிவருகின்றன. அடிகள் குழந்தைகளின் காதுகளைப் பிடித்திழுக்கிறார்; முதுகில் தட்டிக் கொடுக்கிறார். இவர், தமது அறையில் இருக்கும்போது, இக்குழந்தைகள் உள்ளேவந்து பார்க்கின்றன. 'பேரிச்சம்பழம் வேண்டுமா, திராட்சப்பழம் வேண்டுமா?' என்று அடிகள் கேட்டுக்கொண்டே ஒரு தட்டுநிறை பழங்களைக் கொடுக்கிறார். குழந்தைகள் தட்டை உடனே காலியாக்கிவிட்டு ஓடிவந்து தட்டை உடனே கொடுக்கின்றன காந்தியடிகள் கைராட்டினம் சுழற்றிக்கொண்டிருக்கும்போது, இவைகள், பக்கத்திலே உட்கார்ந்து ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கின்றன. இந்தக் கைராட்டினத்தை மாகாத்மாகாந்தியும் ஸ்ரீமதி மீராபாயும் சுழற்றும்போது, கப்பலிலுள்ள பெரியவர்களும் ஆச்சரியப்படுகிறார்கள். இந்தக் கைராட்டினம் எத்தனையோ வருஷங்களாக நடைமுறையில் இருந்தபோதிலும் இவர்களுக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாமலிருக்கிறது. பலர், இதன் தத்துவத்தைப்பற்றியும் இதை எப்படி வேலை செய்து காட்டுவதென்பதைப் பற்றியும் பல கேள்விகள் கேட்டார்கள். முக்கியமாக, இந்திய மாணாக்கர்கள் இதைப்பற்றி அறிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாயிருந்தார்கள். இவர்களுக்கு ஒருநாள், தம்மிடமிருந்த 700ரூபா பெறுமான ஒரு காஷ்மீரசால்வையை 7000 ரூபாய்க்கு அக்கப்பலிலேயே செல்லும் ஒரு பிரயாணிக்கு விற்றுவிட்டதாகக் காந்தியடிகள் கூறியபோது, இவர்கள் பேராச்சரியத்தை யடைந்தார்கள்.

காலைப் பிரார்த்தனையைவிட மாலைப் பிரார்த்தனையின்போதே, சுமார் நாற்பதுபேர்வரை தினந்தோறும் கூடுகின்றனர். சில ஐரோப்பியர்களும் இதற்கு வருகிறார்கள். இப்பிரார்த்தனை முடிந்த பிறகு, தினந்தோறும் பதினைந்து நிமிஷநேரம்வரை ஏதேனுமோர் உபந்நியாசம் செய்ய வேண்டுமென்று இந்த நண்பர்கள் மகாத்மாவைக் கேட்டுக்கொண்டார்கள். தினந்தோறும் ஒரு கேள்வி கேட்கப்பட வேண்டுமென்றும், மறுநாள் அதற்கு அடிகள் பதில் அளிக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒருநாள் ஓர் இந்திய மாணாக்கர், பிரார்த்தனையினால் காந்தியடிகளுக்கு ஏற்பட்ட அநுபவத்தைப் பற்றிக் கூறும்படி கேட்டார். அப்பொழுது அவர் கூறியதாவது:—

'என் உயிரைக் காப்பாற்றியது பிரார்த்தனைதான். அது இருந்திராவிட்டால் நான் எப்பொழுதோ பைத்தியகாரனாகிவிட்டிருப்பேன். என் வாழ்நாளிலே பொதுநல விஷயமாகவும், சொந்த விஷயமாகவும் பலவித அநுபவங்களை நான் அநுபவித்திருக்கிறேன். இந்த அநுபவங்கள் எனக்கு ஒருவித வெறுப்பையே உண்டாக்கிவிட்டன. ஆனால் பிரார்த்தனையினால் இந்த வெறுப்பு என்னை விட்டு நீங்கிவிட்டது. ஆனால், என் வாழ்க்கையின் ஓர் அம்சமாகச் சத்தியம் இருக்கிறது. அதைப்போல் இந்தப் பிரார்த்தனை இல்லையென்பதுண்மை. அவசியத்தை முன்னிட்டே இந்தப் பிரார்த்தனையை நான் கைக்கொள்ள வேண்டியதாயிற்று. நான் மிகவும் துன்பப் பட்டுக்கொண்டிருக்குங் காலத்து இந்தப் பிரார்த்தனை எனக்குப் பெரிதும் ஆறுதல் அளித்திருக்கிறது. ஆண்டவனிடத்திலே எனக்கு நம்பிக்கை அதிகமாக அதிகமாகப், பிரார்த்தனையிலே என மனம் அதிகமாக ஈடுபட்டது. பிரார்த்தனையில்லாமல் வாழ்க்கை சூனியமாகிவிட்டது. நான் தென்னாபிரிக்காவில் இருந்தபோது, கிறிஸ்தவக் கோயில்களில் நடைபெறும் பிரார்த்தனைகளுக்குச் செல்வதுண்டு. அங்கு, தொழுவோர், ஆண்டவனைப் பெரிதும் இரந்து வேண்டிக் கொண்டார்கள். ஆனால் என்னால் அப்படி செய்ய முடியவில்லை. தேகத்திற்கு உணவு எப்படி இன்றியமையாததோ அப்படியே ஆன்மாவுக்குப் பிரார்த்தனை இன்றியமையாததென்று என் வாழ்நாளின் பிற்பாகத்தில் நான் கண்டுகொண்

டேன். ஆராய்ந்து பார்த்தால், ஆன்மாவுக்குப் பிரார்த்தனை இன்றியமையாதது என்பது போல், தேகத்திற்கு உணவு அவ்வளவு இன்றியமையாததல்ல. ஏனெனில், தேகத்தை ஆரோக்கிய ஸ்திதியில் வைத்திருக்கவேண்டுமானால், சில சமயங்களில் பட்டினிபோட வேண்டியது அவசியமாயிருக்கிறது ஆனால் ஆன்மாவுக்குப் பட்டினி போடுவதென்பது கிடையாது. உலகத்திலே தோன்றிய மகான்களில் மூவராகிய, புத்தர் பெருமான், கிறிஸ்துநாதர், நபிகள்நாயகம் ஆகிய இவர்கள், பிரார்த்தனையின் மூலமாகவே தாங்கள் ஞானத்தை யடைந்ததாகப் பல ஆதாரங்களை வைத்துச் சென்றிருக்கிறார்கள். ஏன்? இப்பொழுதும் இலட்சக்கணக்கான ஹிந்துக்கள், முஸல்மான்கள், கிறிஸ்தவர் முதலியோர் தங்கள் வாழ்க்கையில் இன்பத்தைக் காண, பிரார்த்தனையே செய்கிறார்கள். இவர்களை நீங்கள் பொய்யர்களென்று சொல்லமுடியாது இவர்கள் பொய்யர்களானால் இவர்களுடன் கலந்துகொள்ளவே நான் விரும்புகிறேன் ஏனெனில் இந்தப் பிரார்த்தனையான ஒன்று கோவின்றி நான் ஒரு நிமிஷங்கூட என் வாழ்நாளைக் கடத்த முடியாது. இப்பொழுதேற்பட்டுள்ள அரசியல் நிலைமைக்கண்டு எனக்கு எவ்வளவு சோர்வு ஏற்பட்டபோதிலும், நான் என்மன அமைதியை இழந்துவிடவில்லை என் மன அமைதியைக் கண்டு பொறாமைப் படுகிறவர்கள் கூட உண்டு இந்த அமைதி, பிரார்த்தனையினாலேயே உண்டாகிறது நான் பெரிய படிப்பாளியல்ல; ஆனால் பிரார்த்தனையின் பெற்றியை உணர்ந்தவன் எந்த உருவத்தை வழிபாடு செய்தாலும் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. இவ் விஷயத்தில் அவரவர் போக்குப்படியே நடந்து கொள்ளவேண்டும், ஆனால், ஏற்கெனவே பெரியோர் சென்ற சில பாதைகள் இருக்கின்றன. அவைகளின் வழியே செல்லுதல் நலம். இதுவே என்னுடைய அநுபவம். ஆதலின் ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்து, தங்கள் வாழ்நாளில் ஒவ்வொரு புதிய அமிசத்தைச் சேர்த்துக் கொள்வாராக."

இதைக்கேட்ட ஓர் இளைஞர் 'நீங்கள் ஆண்டவனிடத்தில் நம்பிக்கைகொண்டு வாழ்நாளைத் தொடங்குகிறீர்கள். ஆனால் நாங்கள் அவநம்பிக்கையுடன் தொடங்குகிறோம். நாங்கள் எப்படி பிரார்த்தனை செய்வது?' என்று வினவினர் இதற்கு அடிகள் அளித்த பதில் வருமாறு:—

"ஆண்டவனிடத்தில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படி செய்வது எனது சக்திக்குப் புறம்பானதாகும். ருஜூப்படுத்த முடியாத சில விஷயங்கள் இருக்கின்றன. ஆண்டவன் இருப்பானது, நமது மனதுக்கு எட்டாததாயிருக்கிறது அறிவுக்கு எட்டும் விஷயத்தைப்பற்றி நான் ஒன்றுங் கூறப்போவதில்லை ஏனெனில் அறிவினால் ஆண்டவன் இருப்பைப்பற்றிச் சர்ச்சை செய்வது அநேகமாகத் தவறியேபோயிருக்கின்றது. ஆண்டவன், தர்க்கத்திற்கு அதீதனாயிருக்கிறான். ஆனால் பல நிகழ்ச்சிகளைக் கொண்டு ஆண்டவன் இருப்பை ருஜூப்படுத்தலாம். ஆனால் அவைகளையெல்லாம் பற்றி இப்பொழுது நான் உங்களுக்கு எடுத்துக்காட்டப் போவதில்லை குழந்தைகள் நம்பிக்கை வைப்பதைப்போல் ஆண்டவனிடத்தில் நீங்கள் நம்பிக்கை வையுங்கள். நான் இருப்பது எப்படி நிச்சயமோ அப்படியே ஆண்டவன் இருப்பதும் நிச்சயம். ஆண்டவனிடத்தில் நம்பிக்கை வைப்பதானது, என்னைப்போல் இலட்சக்கணக்கான ஜனங்களுக்கு அவசியமாயிருக்கிறது அவர்களுடைய அன்றாட வாழ்க்கையிலிருந்து இந்த உண்மையை நீங்கள் அறிந்துகொள்ளலாம் இழந்துவிட்ட நம்பிக்கையை மீண்டும் பெறவேண்டுமென்றே நான் விரும்புகிறேன் இந்த நம்பிக்கையைப் பெறவேண்டுமானால், நீங்கள் கற்ற கல்வியை ஒரு சிறிது மறந்துவிடவேண்டும். நமக்கு ஒன்றுமே தெரியாதென்ற எண்ணத்துடன் ஆரம்பியுங்கள். அதுவே அடக்கத்திற் கறிகுறி நாம் சாதாரண அணுக்களினும் கீழானவர்கள், அணுக்களினும் கீழானவர்கள் என்று வேண்டுமென்றே கூறுகிறேன் ஏனெனில் அணுவானது, இயற்கை விதிப்படி நடக்கிறது. ஆனால் நாமோ நமக்குள்ள அஞ்ஞானத்தால், இயற்கை விதியையே மறக்க ஆரம்பிக்கிறோம். நம்பிக்கையில்லாதவர்களுக்கு நான் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை ஆண்டவன் இருப்பை எப்பொழுது நீங்கள் ஒப்புக்கொண்டீர்களோ, உடனே பிரார்த்தனையின் அவசியத்தையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் நமது வாழ்க்கையே ஒரு பிரார்த்தனையாயிருக்கிறதென்றும், ஆதலின் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் உட்கார்ந்து பிரார்த்தனை செய்யவேண்டியது அவசியமில்லையென்றும் சுலபமாகச் சொல்லிவிடாதீர்கள் ஆண்டவனோடு எப்பொழுதும் ஒன்றுபட்டு நின்றவர்கள் கூட இங்ஙனம் கூறத் துணியவில்லை. அவர்களுடைய வாழ்க்கை, பிரார்த்தனை மயமாக இருந்தது. ஆனால் அவர்கள் நம்பொருட்டு, குறித்த சில நேரங்களில், பிரார்த்தனை செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். தங்களுடைய பக்தியைத் தினந்தோறும் ஆண்டவனிடத்தில் தெரிவித்துக்கொண்டிருந்தார்கள். நாம் இங்ஙனம் நமது பக்தியைத் தெரிவிக்கவேண்டுமென்று ஆண்டவன் விரும்புகிறானில்லை ஆனால் அங்ஙனம் செய்யவேண்டியது நமது கடமை அப்படிச் செய்வதனால், நமது வாழ்நாளிலே ஏற்படும் பலதுன்பங்கள் விலகிப் போகும்." (நவசக்தி.)

தமிழ்மொழி.

"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினு மப்
பொருண், மெய்ப்பொருள் காண்பதறிவு"

[குறள்]

சென்ற ஆவணித் திங்கள் ௮-ம் நாள் (24-8-31) வெளிப்போந்த "இந்துசாதன" வெளியீட்டின்கண் மேற்குறித்த தலைப் பெயருடன் திகழ்ந்த கட்டுரை என் கருத்தை யதிகங் கவர்ந்தது. அதனை யெழுதிய நண்பர் தமிழ் மொழியை வளம்பெறச் செய்ய வேண்டியது எமது தலையாய சிறந்த கடனெனவும், அதனை வளர்க்கத் தமிழ்மக்கள் முன்வரவேண்டுமெனவும், அதனை ஆங்கிலமொழியுடன் கலந்து வழங்குதல் தகாதெனவும், தமிழ் மொழியைத் திருத்தமாகச் செவ்வனே பேசவோ அன்றி எழுதவோ அறியார் தமிழ் மக்களுட் பலரிருக்கின்றனரெனவும், இன்னோன்ன பிறவுங்கூறி தமிழ் மொழி வாழ்த்துடன் முடித்திருக்கின்றார். தமிழ் மொழியின்கண் இவருக்குண்டாய பற்று மிகுதி காரணமாக மற்றேனையோரையும் அவரது நெடுந் துயிலினின்றுந் தட்டியெழுப்பி அதனைப்பண்புபெறச்செய்யவேண்டுமென்னும் பேரவாவே இவரைப் பிடர் பிடித்துத் தள்ளியமையி னக்கட்டுரையை வரையலாயினரென அறியக் கிடக்கின்றது. ஆதலின் அவர் நன்னோக்குடனேயே எழுதினரென்பது அறிவுடையாராற் கொள்ளப்படுதல்வேண்டும். அப்படிக் கொள்ளுங்கால் அறியாமை காரணமாக எழுதப்படு மெதனையு மெள்ளாது அத்தகையாளர்க்கு விளக்கமேற்படுத்தி அத் தெரியாத் தன்மை காரணமாக எழுந்த பிழைகள் பலவற்றையு மெடுத்துக் காட்டி அவரைத் தெளிவுறச் செய்தலை அறிவுடையாரால் பெரிதும் விரும்பப் படத்தக்கது.

நம்மிடை பரந்து காணப்படும் பண்டைத் தமிழ் நூற் குவியல்களின் விழுமிய கருத்துக்களை யாம் காய்தலுவத்தலின்றி நடுநிலை நின்று சற்றே யாராய்வோமாயின் நம் தமிழ் மொழி உலகிலுள்ள மற்றேனைய மொழிகட்கும் முற்பட்டதெனவும், அஃது தனக்குத்தானே நிகரானதன்றி பிறிதொருமொழி அதற்கு இணையில்லையெனவும் அஃது பிறிதொருமொழியினுதவியின்றித் தானே (தானே) தனித்து வழங்கு மாற்றலுண்டெனவும், அதனைச் சிறப்புறச் செய்ய மற்றெம்மொழியையும் கலத்தல் தகாதெனவும் அப்படிச்செய்யின் அஃது தன் சீர்மையிற் குன்றுமெனவும், அஃது இயற்கை மொழியே யன்றிச் செயற்கைமொழி யன்றெனவு மறியக்கிடக்கின்றது. இதனைப் பல ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களும், பல மொழி நூல் வல்லுநர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவ்வுண்மைகளை Dr. Caldwell, Dr Grierson, Max Muller முதலாம் ஆங்கில ஆசிரியர்களும்; மறைமலையடிகள் கா. சுப்பிரமணியம்பிள்ளை, மு. சி. பூரணலிங்கம்பிள்ளை, வி. கலியாணசுந்தர முதலியார், நீலாம்பிகையம்மையார் முதலாய தமிழ் ஆசிரியர்களும் எழுதிய மொழி நூல்களிற் பரக்கக்காணலாகும்.

அஃதங்ஙனமாகத் தமிழ், குடமுனியின் நாவிற் பிறந்து ஆரியத்தின மடியில் வளர்ந்ததென்பது எங்ஙனமியலும். சிவபிரான் திருக்கலியாண காலத்தில், அத்திருக் கலியாணச் சிறப்புக்களைக் காண்பார் கருதி உலக மக்கள் இமயமலைச் சாரலை யடைந்தமையின் உலகத்தின் வடபாகம் தாழ்ந்து தென்பாக முயர்ந்து நிலைதவறியதைக் கண்ணுற்ற சிவபிரான் இக்குடமுனியைத் தென்னாடு போந்து உலகைச் சமன் செய்யும்படி திருவுளம் பற்றியதாகக் கூறியுள்ள புராணக் கூற்றுக்களை யறியாதார் யார்? அக்கட்டளையை உச்சிமேற் கொண்டு தென்னாடுசெல்லுமுன் இக்குடமுனி வேண்டிய வேண்டுகோளைக் கீழே தருதும்:—

"விடைகொடு போவனென்றை
வேண்டினனேகுந் தேயந்
தொடைபெறு தமிழ் நாடென்று
சொல்லுப அந்த நாட்டின்
இடைபெறு மனிதரெல்லா
மின்தமிழ் ஆய்ந்த கேள்வி
யுடையவரென்ப கேட்டார்க்
குத்தர முரைத்தல் வேண்டும்"

இக் குடமுனியைக் குறித்துக் கம்பர் கூறிய வற்றையுந் தருதும்:—

"என்றுமுளதென்றமிழியம்பிசைகொண்டான்'

தேனினுமாற்றலினிய நம் தமிழ் குடமுனிக்கும் பன்னெடுங் காலத்திற்கு முற்பட்டதெனவும், அவர் நாவிலிருந்தே பிறந்ததன்றெனவுமிக் கூற்றுக்கள் நமக் கறிவுறுத்த வில்லையா? தமிழ் மொழி அதிக சீர் சிறப்புடன் வழங்கிய காலை வடமொழி எழுத்து வழக் கற்றிருந்ததெனக் கூறப் பல சான்றுகளிருக்கின்றமையின, தமிழ் ஆரியத் தாயின் மடியில் வளர்ந்ததெனக் கூறுதல் பொருந்தாதென்க.

நமது நண்பர் ஆங்கில மொழிச் சொற்களைத் தமிழோடு கலத்தல் தகாதென வற்புறுத்தியது எமக்குப் பெருமகிழ்ச்சி யளித்ததேயாயினும், அவர் தாமெழுதிய கட்டுரையில் வடமொழிச் சொற்களைக் கூடியவரை யெடுத்தாண்டிருப்பது கண்டு கவலாதிருக்க முடியவில்லை. ஆங்கில மொழிச் சொற்களைக் கலந்து தமிழின் தனிப் பெருஞ் சிறப்பினைக் கெடுப்பது தகாதென வழக்காடுமிவர், ஆங்கிலம் போன்றே தமிழுக்குப் புறம்பான வடமொழிச் சொற்களைக் கலந்து வழங்கித் தமிழின் தூய்மையைக் கெடுப்பது அழகிதாமோ? தாமெழுதிய சிறு கட்டுரையின் முதலிருபது சிறு வரிகளுக்குள் "பாஷை, வருஷம், ஜனித்து, சங்கம், சஞ்சரித்து, திராவிடம், தேசம், சக்தி, அர்த்தம் பிரகாசம், கௌரவம், சாஸ்திரம்" முதலாய வட சொற்களைச் சேர்த்து எழுதியிருக்கின்றார். இவ்வடமொழிக்கு நேரான செந்தமிழ்ச் சொற்களாயமொழி ஆண்டு, பிறந்து, கழகம், உலாவி தென்னாடு, நாடு, வழித்தோன்றல், பொருள், போன்று, பெருமை, நூல் என்பன முறையேயிருப்பவும் கனியிருப்பக் காய் கவர்ந்தவாறு இவற்றை விடுத்து வடமொழிச் சொற்களை வீணே யெடுத்தாளுதல், இவர் தாங்கூறுங் குற்றத்தில் இவர்தம்மையும் வீழ்விக்குமன்றோ?

வடமொழியைப் பண்புபெறச் செய்தற்கு அளவில்லாப்பார்ப்பனர்களும் அவர்வழிச் சார்ந்தார்களும் முன்னெழுந்து விட்டனர். ஆனால் நமது தமிழ்மொழியை அதன் தனிப்பெருஞ் சிறப்புக் குன்றா வண்ணம் பாதுகாப்பதற்கு முன்வருதுள்ளார் மிகச் சிலரினுஞ்சிலரேயாவர். தமிழ்மக்களுட் பெரும்பாலார் இறந்துபட்ட வடமொழியை யுயிர்ப்பிக்கவேண்டுமென எடுத்துக்கொள்ளும் முயற்சியில் ஆயிரத்துக்கொரு பாகமாவது தமிழை வளம்பெறச் செய்யக் கருதுவரேல், இன்று எம்மொழியின் நிலை எத்துணைச் சிறப்புடைத்தாயிருந்திருக்கவேண்டும். இவர்கள் எம்மொழியைப் பாதுகாவாவிடினும் விடுக. ஆனால் வடமொழிக் கலப்பாகிய கோல் கொண்டு புடைப்பதன் மூலம் தமிழின் வளத்தைப் பாழ்படுத்த முயல்வார் செயலை யென்னென்பம்? இஃது கொடுமையினுங் கொடுமை. ஐயோ! இவர் தம் கொடிய முயற்சியை நினைந்து நினைந்து நம் தமிழ்தாய் நெஞ்சழிந் தோலமிடுகின்றனள்.

இறந்தவரை உயிர்ப்பித்தல் இயலாத தொன்றென்பது உலகறிந்த உண்மை. அஃதங்ஙனமிருப்பவும்,வடமொழி வல்லோரைநிரம்பப்பெற்றிருப்பதன் காரணமாக அதனைப் பேசிவந்தோர் நெகிழவிட்டமையான் அஃது தற்காலம் உலக வழக்கற்று இறந்துபட்டிருப்பவும் அங்ஙனம் உயிர் நீத்துப்போய உடம்பைக் கட்டியழுவதாலோ அன்றி மருந்து முதலாயவற்றை உட் செலுத்துவதாலோ போன உயிரை மீட்டுவரச் செய்யக்கூடியவன்மை எமக்கில்லாதிருப்பது கண்டும் அவற்றைப் புறக்கணித்து யாம் சென்றுபோன உயிரை மீட்டு வருவோமெனக் கங்கணங் கட்டிக்கொண்டு நடிப்பவர்களின் அறிவுதானிருந்தவாறென்னே!

இவ்வாறு முயல்வார் தன்னை ஆதரிப்பார் யாருமின்றிக் குற்றுயிராயிருக்கு மித்தருணங் கைவிடாது, இன்னோசை நிரம்பப்பெற்ற எம் மியற் றமிழ் மொழியைப் பாதுகாக்க முன்வருவரேல் அவர் புகழ் வானழாவ ஓங்கி ஞாயிறன்னவரையுங் குன்றின்மேல் விளக்குப்போல் நின்றிலங்கு மென்பது வெள்ளிடைமலை.

"பல்லுலகும் பலவுயிரும் படைத் தழித்துத்
துடைக்கினுமோர், எல்லையறு பரம்பொருள்
முன்னிருந்தபடி யிருப்பதுபோற், கன்னட
முங் களிதெலுங்குங் கவின் மலையாளமுந்
துளுவும், உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபலவாயிடினும், ஆரியம்போல் உலக
வழக் கழிந்தொழிந்து சிதையாநின், சீரிள
மைத்திறம் வியந்து செயன்மறந்து வாழ்த்
துதுமே."

ரஞ்சக்மாலிம், மலாயா, இங்ஙனம்,
9—9—31. பசுந் தமிழ்த்தொண்டன்.

அடைவு நகை
விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 8-ம் நெம்பர் நாகக் கடைவீதி வே. த வெற்றிவேற்பிள்ளை சிதம்பரப்பிள்ளை & தம்பிப்பிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1930-ம் ஆ 3-ம்௴

இல.	உ	ரூ	ச.	நகைகளின் விபரம்.
3304	1	18		பழைய கடு சறடு 1
3317	1	18		தாலிக்கொடி 1
3319	1	6		கொப்புச்சிமிக்கி சோடி 1
3327	2	44		பட்டக்காப்பு சோடி 1
3341	2	8		வளையல் தகடு 6
3395	8	6	50	தோடு சோடி 1
3415	9	6		சிறு பின் 1, இமிற்கல் காதோலை சோடி 1
3427	10	14	04	பத சவுக்கமணிக்கோர்வை 1க்கு மணி 22
3429	10	10	04	வெ பழைய பாதசரம் சோடி 1 சுரை 1 இல்லை
3432	10	8		வெ அடுக்குக்காப்புசோடி 1
3439	11	30		பட்டக்காப்பு சோடி 1
3475	15	36	04	சிரசப்பூவுடன் 6 பட்டு மணி 1 எ இ
3479	15	7		வெ தண்டை சோடி 1
3486	15	15		கைச்சங்கிலி 1 ச இ
3505	16	10		கூடு 1
3619	24	8		மோதிரம் 1
3620	24	50	04	கல் பெண்டன் 1
3629	25	22	04	பொட்டு பிறையுடன் பொன் கொடி 1
3638	25	45	04	பொட்டு பத சங்கிலி அட்டியல் 1
3647	27	11		சவுக்கமணி 1க்கு மணி 22
	4-ம்௴			
3706	1	50		பத சம்பிப்பூரான் அட்டியல் 1 ச இ
3707	1	20		பதஉட்கட்டு1க்கு தட்டு23
3708	1	22		தங்கப்பவுண் 1, குவை பவுண் 1
3709	1	10		வெ தண்டைசோடி 1 ச இ
3710	1	16		வெ பாதசரம் சோடி 1
3711	1	10		வெ பாதசரம் சோடி 1 சுரை 1 இல்லை
3766	5	45		பட்டக்காப்பு சோடி 1 சசி
3787	6	11		கொப்புச்சிமிக்கி சோடி 1
3855	10	12		திருகுபூ 1, வெ எஸ் கறணை சோடி 1
3871	11	6	04	செருகுதோடு சோடி 1
3873	11	11	04	½பவுண் பொத்தான் 1
3877	11	37		கூடுடன் சங்கிலி 1 மூடி முறியல்
3885	12	10		வெ அடுக்குக்காப்புசோடி 1
3890	12	65	04	5பட்டு மணி 1
3907	12	10		கைவிலங்கு 1
3921	14	8	04	கலாவரை மோதிரம் 1
3931	18	8		மோதிரம் 1
3983	18	25		குண்டுச்சங்கிலி 1 கொ இ
4024	20	6		வெ கறணை சோடி 1
4032	21	5	50	சந்தோடு சோடி 1
4033	21	6		தூக்கமுடன் படக்கர் 1 தூக்கம் 1 இல்லை
4036	21	65		பூக்காப்பு சோடி 1
4052	22	50		மணிக் கோர்வை 1க்கு மணி32, பத சவுக்கமணிக் கோர்வை 1க்கு மணி 31
4053	22	18		வெ பாதசரம் சோடி 1, வெ குழற்காப்பு சோடி 1
4112	26	30	04	2பட்டுக் கைச்சங்கிலி 1
4119	27	40		சங்கிலி அட்டியல் 1
	5-ம்௴			
4174	3	30		சம்பிப்பூரானட்டியல் 1
4175	3	25		பொற் கடையம் 1
4176	3	12		வளையல் 8
4177	3	10		வளையல் 8
4 80	3	80		சிரசப்பூவுடன் 7பட்டு மணி 1
4181	3	20		ஐந்துபட்டு மணி 1
4184	3	7		வளையல் 7
4 92	4	13		முறுக்குக்காப்பு சோடி 1
4 95	4	50		பட்டக்காப்பு சோடி 1
4 99	4	15		மணியட்டியல் 1 ச இ
4223	5	8		இதழ் திருகுபூ 1
4229	6	20		கடு பத பொன் பூரானட்டியல் 1
4233	6	25	04	பழைய 1 பட்டிலைமாலை 1
4248	8	16		வெ பாதசரம் சோடி 1
4251	8	10		சவுக்கமணிக் கோர்வை 1க்கு மணி 20
4253	8	6		சிறு இதட்பூ 1
4268	8	21		பொன் கொலுசுக்காப்பு சோடி 1
4271	9	9	04	கூடு 1
4290	11	6		பொன் தோடு சோடி 1, கொப்புச்சிமிக்கி சோடி 1
4300	12	6		சிறு மோதிரம் 1, வெ பழைய கறணை சோடி 1
4314	13	8		வெ அடுக்குக்காப்பு சோடி 1 ச இ
4328	14	13	04	இ சிகப்புக் கடுக்கன் சோடி 1 ச இ
4336	14	6		வெ குழற்காப்பு சோடி 1
4338	14	40		தங்க அரைஞாண் 1 கொ இ
4357	15	42		பத பொட்டுடன் திருக்கொன்றை மணிக் கோர்வை 1
4376	17	10		தங்கக் காப்பு சோடி 1 பூ முறியல்
4384	18	6		மோதிரம் 1
4404	19	7		தங்கக்காப்பு சோடி 1
4406	19	40		சம்பிப்பூரானட்டியல் 1
4436	21	41		பீலிக்காப்பு சோடி 1
4440	22	10		குவை தங்கப்பவுண் 2
4448	23	10		வளையல் 8
4456	23	10	04	இ காதோலைசோடி 1 ச இ
4509	29	40	04	சம்பிப்பூரானட்டியல் 1
4515	27	8	04	பவுண்காப்பு சோடி 1
4517	27	75	04	பத சங்கிலி அட்டியல் 1, சவுத்தோர் 1
4538	29	25	04	குவை தங்கப்பவுண் 1, கொளுக்கியுடன் தங்கக் காப்பு சோடி 1
4547	31	10	04	ஒட்டுவளையல் 5, தகடு 1
4549	31	13	04	சவுத்தோர் 1
	6-ம்௴			
4601	5	30		6பட்டு மணிக்கோர்வை 1
4604	5	65		5 பட்டிலை மாலை 1, சிறு கூடு 1
4617	6	13		பழைய தாலிக்கொடி 1
4621	6	20		பூவேலை செய்த ½ டலர் 1
4623	7	15	25	பத சவுக்கமணிக்கோர்வை 1க்கு மணி 27
4628	7	16		வெ பாதசரம் சோடி 1
4650	8	25		சிறு சம்பிப்பூரான் அட்டியல் 1 ச இ
4665	9	20	04	தாலிக்கொடி 1
4677	9	12		வளையல் 8, ஒட்டு வளையல் 6 பூ இல்லை
4679	9	20		சங்கிலி 1 கொ இ
4712	11	40		செடிக்காப்பு சோடி 1 ச இ
4717	12	20	04	தாலிக்கொடி 1
4721	12	8	04	புரோச்சு 2
4727	12	10	04	ஒட்டுவளையல் 6
4752	14	25	04	சவுத்தோர் 1, புரோச் 1
4758	14	10		குலைக்கடுக்கன் சோடி 1
4762	14	11		தங்கமோதிரம் 1
4772	15	5	50	கொப்புச்சிமிக்கி சோடி 1 ச இ
4795	16	40		சம்பிப்பூரான் அட்டியல் 1
4798	16	40	04	செடிக்காப்பு சோடி 1
4799	16	30	04	அலுக்குத்து 20
4829	18	5	50	பொத்தான் ½பவுண் 1
4857	21	9		செருகு தோடு சோடி 1, படக்கர் 1
4878	22	75		பூக்காப்பு சோடி 1 மூசப்பில்லை
4879	22	91		முறைச்சக்குத்திக் கொடி 1, கூடு 1
4886	23	45		சிறு பீலிக்காப்புச் சோடி 1
4905	24	35		வேலைசெய்த பவுணுடன் சங்கிலி 1
4908	24	13	04	ஆனைமயிர் காவிலக்கு 1
4913	25	8	04	இ கல் சவுத்தோர் 1
4919	25	6	54	கொப்புச் சிமிக்கி சோடி 1
4920	25	6	04	சிறு திருகுபூ 1
4927	26	45		பட்டக்காப்பு சோடி 1
4934	26	21		பட்டக்காப்பு 1
4944	27	10		மோதிரம் 1
4946	27	27		சங்கிலி 1
4982	30	14	04	ஒருகல் செவ்வக்கித் தோடு சோடி 1

விற்பனவு:—பிரசோற்பத்தி௵ ஐப்பசி௴ 14-ந் திகதிக்குச்சரியான (30-10-31) வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகை நீங்கலாக மீதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்,
(Mis 380. 8&12) வெச்திஸ்டேஸ்தர்.

தந்திச் செய்தி.

பாராளுமன்றம் கலைவுறுகின்றது.

றக்பி, 6-10-81.

நாளைக்குப் பாராளுமன்றம் கலைவுறுமென்று முதன் மந்திரியார் கூறினர். பின், நியமனாதிகாரபத்திரம் சமர்ப்பித்தல் ஒக்டோபர் 16உயும் பொதுத்தேர்தல் ஒக்டோபர் 27உயும், புதிய பாராளுமன்றம் கூடுவது நவம்பர்மீ 10உயுமென நியமிக்கப்பட்டிருக்கின்றது.

முதன் மந்திரியார், தாம் தொழிற் கட்சியாளர் என்ற உரிமையுடனேயே தெரிவுக்கு அபேட்சகராய் நிற்பதாகத் தெரிவிக்கின்றனர்.

மிஸ்டர் 'லயட்ஜோர்ஜ்' இப்பொழுது பாராளுமன்றம் கலைவுறுவதும் ஒரு புதிய பொதுத்தேர்தல் நடைபெறுவதும் நல்லதல்லவென அபிப்பிராயப் படுகின்றனர். இவர் சுதந்தர மிதவாதக்கட்சி (லிபரல்) யைச் சேர்ந்தவராகும்.

நம்பிக்கை இருக்கிறது.

லண்டன், 6-10-31.

இந்து - முஸ்லீம் பிரச்சினைகளைப்பற்றி மஹாத்மாவும் முஸ்லீம் தலைவர்களும் அளவளாவ ஆரம்பித்த நாளாக முதல் முதல் இன்றுதான் சொற்ப நம்பிக்கை ஏற்படக்கூடிய பேச்சுகள் நிகழ்ந்தன. முஸ்லிம்களுக்குப் பிரத்தியேகத் தேர்தல் வட்டாரங்களும், பஞ்சாப்பிலும் வங்காளத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையிருப்பதாகவும், இவர்கள் சிறுபான்மையாகவிருக்கும் இடங்களில் அதற்குத் தகுந்த விட்டுக்கொடுப்பும் இருப்பதற்கு சமையோசித உடன்பாடாக மஹாத்மா ஒப்புக்கொண்டார்.

புதிய அரசியற் திட்டம் நிறுவப்பட்டுத் தொழிற்பட்டவுடன் தேர்தல் வட்டாரங்கள் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் பொதுவானவைகளாயிருப்பதா இல்லையா என்ற பிரச்சினையைப்பற்றித் தனித்தனி இந்தியாவிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமுடைய சம்மதமும் எடுபடுமாம்.

எப்படியாகிலும் இந்தியத் தேசிய மகாநாட்டின் பிரச்சினைகளை முற்றாக அங்கீகரித்துக்கொள்ளுமாறு மஹாத்மா கேட்டிருக்கின்றார். இன்று சாயந்தரம் ஒரு அவசரக்கூட்டம் கூடி முஸ்லீம்கள் இதைப்பற்றி ஆலோசிப்பார்கள்.

சீக்கியப் பிரதிநிதிகளுடனும் மகாத்மா சம்பாஷணை நடத்துகின்றனர்.

முஸ்லிம்களுக்கு வேண்டுவது யாது.

லண்டன் 6-10-31.

மஹாத்மா சமயோசித உடன்பாடாக ஏற்றுக்கொண்ட பிரச்சினைகளைப்பற்றி ஆலோசிக்க முஸ்லிம் பிரதிநிதிகள் அக்கான் அவர்களை றிற்ஸ்ஹொட்டலிற் சந்தித்தனர். இப்பிரச்சினைகள், இந்தியத் தேசிய மஹாநாட்டாரின் தீர்மானத்தை யடக்கியதாக விருக்கின்றன. ஏனெனில் மஹாநாட்டார் மஹாத்மாவுக்குக் கொடுத்த தத்துவம் இதுவேயாகும். பூரண சுயராச்சியத்தைபபற்றி முஸ்லிமகள் கொண்டுள்ள அபிப்பிராயம் இந்திய மிதவாதக் கட்சியாரின் அபிப்பிராயம் போன்றதாகவே யிருக்கின்றது.

முஸ்லிம் பிரதிநிதிள் பூரண சுயவாட்சியை விரும்புவதாகத் தோற்றவில்லை. ஆனால் அவர்கள் இராசாதிகாரச் சுயவாட்சி (டொமினியன்ஸ்ரேறஸ்) யை விரும்புவதாகத் தெரிகின்றது.

பாதுகாப்பு பண அதிகாரம் ஆகியவற்றில், முஸ்லீம்கள் மஹாத்மா கேட்பதாகிய சேனைப் பராபரிப்புரிமையை விரும்புகின்றனர். பண அதிகாரத்தில் அவர்கள் மஹாத்மாவின் கொள்கையை முற்றாக அங்கீகரிக்கவில்லை.

கூட்டுத் தேர்தலா? புறம்பான தேர்தலா?

முஸ்லிம் பிரதிநிதிகள், மற்றைய சிறுபான்மைக் கட்சியாளர்களுக்கும் பிரத்தியேக பிரதிநிதித்துவம் கொடுப்பதென்பதை முற்றாக அங்கீகரிக்கின்றனர். ஆனால் தாங்கள் எவ்வித வாக்குறுதியும் கூறுவதற்குமுன் மற்றைய சிறுபான்மைக் கட்சியாளர்களின் சம்மதத்தைப் பெறுமாறு மஹாத்மாவைக் கேட்கின்றனர்.

இன்று நடந்த கூட்டத்தின் பயனாக, முஸ்லிம்கள் கேட்கும் கேள்விகளை, இந்தியாவிலே மகாசனங்களின் தனித்தனி அபிப்பிராயத்திற்கு இப்பொழுதே விடும்படி மஹாத்மா கேட்கின்றார்.

டக்டர் அன்சாரி, இப்படியாகத் தனித்தனி அபிப்பிராயம் கேட்கிறவகைக்குச் சம்மதமற்றவ ராகையினால் அவருடைய அபிப்பிராயத்தை அறிவதற்கு இன்றைக்கே மஹாத்மா அவருடன் தந்திமூலம் சம்பாஷிப்பார்.

அதிகாரமற்ற சங்கக் கூட்டம்.

இந்து முஸ்லீம்களின் அதிகாரமற்ற கூட்டம் இன்றும் அளவளாவுவதற்குக் கூடிற்று. மஹாத்மா அக்கிராசனம் வகித்தனர். தாம முஸ்லிகளுடன் அளவளாவியதின் பெறுபேறாக எவ்வித அறிக்கையும் செய்ய முடியாமல் இருப்பதாக மஹாத்மா தொடக்கத்திலேயே கூறினர்.

காந்திஜிக்கு வேண்டுகோள்.

பின்னர் நடந்த சம்பாஷணை நேரத்தில், ஸ்ரீநிவாச சாஸ்திரியார் மஹாத்மாவை நோக்கி, நிசமான விஷயங்களையே கிரகிக்கும்படியும், இந்தியாவுக்கு நெடுங்காலம் நிலைத்திருப்பதும் நன்மை பயப்பதுமான பெறுபேறு அடையக்கூடிய இந்தப் பொன்போன்ற சமையத்தைத் தவறவிட வேண்டாமென்றும் ஒரு நேர்முகமான விண்ணப்பஞ் செய்தனர்.

மேலும் சேர் ஹென்றிகிட்னி, சிறுபான்மைக் கட்சியாளர்களின் உரிமைகளையும் மனங்கொள்ளும்படியாகவும் அவர்களை முற்றாகப் புறக்கணிக்காது இருக்கும்படியும் மஹாத்மாவை வேண்டினர்.

தத்துவ மில்லை.

மஹாத்மா இதற்குத்தாமாகச் சிறுபான்மைக் கட்சியாளர்கள் தங்களுக்குள்ளே ஒற்றுமைப்பட்டு ஒரு பிரச்சினையைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்றும், இப்போது தாம் மஹாநாட்டின் தத்துவப்படி கட்டுண்டு இருப்பதாகவும் கூறினர்.

எந்தச் சிறுபான்மைக் கட்சியினரும் அக்கட்சியின் விருப்பத்திற்கு மாறாக எவ்விதப் பிரத்தியேக நிபந்தனைகொண்டும் தெரிவுரிமைத் தத்துவத்தைப் புகுத்தக் கூடாது என்று இராஜா நரேந்திரநாத் கூறினர்.

இக்கூட்டம் சாயந்தரம் 4-15க்கு முடிவடைந்தது. நாளைக்கு3மணிக்குக் கூடும். இதற்கிடையில் மஹாத்மா முஸ்லீம்களைச் சந்திப்பாரெனத் தெரிகின்றது.

பாராளுமன்றம் கலைவுற்றுத் திரும்பத் தேர்தலடைந்து கூடுங் காலமாகிய 3 வாரங்களிலும் முதன் மந்திரியாராயிருக்கும் மிஸ்டர் மாக்டொனல்ட் வட்டமேசைச் சமாசத்துடன் தொடர்பு வைத்திருக்க வேண்டியவராதலால் லண்டனிலேயே இருப்பர்.

மதுபானமும் யாழ்ப்பாணமும்.

*

மதுபானவிஷயமாக யாழ்ப்பாணத்திலுள்ளாரிற் பெரும்பாலார் எடுத்துக்கொண்ட சிரமம் எவ்வளவென்று கணக்கிட முடியாது. அத்துடன் எவ்வளவோபணமும்செலவாயிற்று. இது காரியமெல்லாம் வீணாகமுடியும்வண்ணம் மதுபானப்பிரியரிற் சிலர் தங்களுக்கு அவசியம் பிறநாட்டிற் குடிவகையாகிய விறண்டி, உவிஸ்கி, உவையின் வேணுமென்றும், இவைகளில்லாவிடில் தங்களுயிர் நிலையாதென்றும், இதிலும் பெரும்பாலோர்கள் சாராயம்வேணுமென்றும் கருணைதங்கிய கவின்மேந்தாருக்கு மனுப்பண்ணியிருப்பதாக அறிந்து மிகவும் வருத்தமடைகிறோம். இவற்றையொழிக்கிறதற்காகப் பிரயத்தனப்படுமெவ்வொருவரும் கண்ணுங்கருத்துமாகப் பிரயாசையெடுக்க வேண்டியது. தேசத்தொண்டில் பொதுநன்மைக்கு எவனொருவன் பாடுபடுகிறானோ அவன் கடவுளாலே ஆசீர்வதிக்கப்பெறுவான். என்ன இடையூறு அல்லது சீவமோசம் வரினும் பின்நிற்காமல் இருப்பதே தேசத்தொண்டர் கடமை. மகாநாடுகூடியபொழுது பிரபுக்கள் அவ்விடத்தில் பலவாறாகப் பேசியிருக்கிறார்கள். இருந்தும் இன்னுமொருமுறை இருமுறை இப்படிப்பட்ட மகாநாடுகூடி முற்றாக மேலே சொல்லப்பட்ட மதுபானத்தை நீக்கவேண்டியது தேசத்தொண்டர்கள் கடமை. சைவாபிமானிகள் யாவரும் இவற்றில் ஊக்கமெடுப்பார்களாக.

க. சுந்தரம்பிள்ளை.

சுக்கிரோதயம்.

சநாதநதர்மானுஷ்டானசீலர்காள்!

குருசுக்கிரர்களுடையஅஸ்தோதயகாலங்களை நாங்களறிய வேண்டியது அத்யாவசியமாகும். தருமசாஸ்திரங்களில குருசுக்கிரர் மூடங்களில் அவ்வக் கிரகத்திற்குரிய வேதசாகைகளையுடையவர்கள் சௌளம், வித்தியாரம்பம், உபாயனம், விவாகம் முதலிய சுபகருமங்களைச் செய்யக்கூடாதென்றும் அதைக் கவனியாது செய்தால் இகத்தில் துன்பத்தையும் பரத்தில் நரகத்தையுமடைவார்களென்றும், அத்தியாவசியமாகச் செய்துகொள்ள வேண்டியதாயிருந்தால் அஸ்தமய கிரகத்திற்கு சாஸ்திரோத்தமாகப் பிரீதி செய்துகொள்ள வேண்டியதென்றும் கூறப்பட்டிருக்கின்றன.

மேலும் குருசுக்கிரர்கள் உதயாஸ்தமன காலமுதல் ஐந்து தினங்கள்வரை பாலவிருத்த தத்துவங்களுடையவரென்றும், அத்தினத்தில் விவாகம் செய்த கன்னிகை விபசாரதோஷம், அற்பாயுத்தோஷம் இவற்றை யடைவாளென்றும், தென்தேசத்திலுள்ளவர்களுக்கு குருசுக்கிரர் பாலவிருத்த தத்துவதினம் ஐந்தில் மூன்று தினங்களே தோஷமுடையதென்று விலக்கி மற்ற இரண்டு தினங்களில் சுபகருமங்கள் செய்யலாமென்றும் கூறப்பட்டிருக்கின்றன.

எல்லாக் கிரகங்களும் சீக்கிரகேந்திர கதியினால் சூரியனைச் சமீபித்தவுடன் சில நாட்கள்வரை நமது கண்ணுக்குக் காணப்படாமலிருக்கின்றன இக்காலத்திற்கு அஸ்தமனம், மௌட்டியம் (மூடம்), பாலு, லோபம் என்று பெயர். மறுபடி சூரியனைவிட்டு விலகிச் சென்றவுடன் சில நாட்கள்வரை நமது கண்ணுக்குக் காணப்படுகின்றன இக்காலத்திற்கு உதயம், தரிசனம் என்று பெயர். சூரியன் கதியைவிட (கதி - நடை; சஞ்சாரகால அளவு) குறைந்த கதியையுடைய கிரகங்களான அங்காரகன், குரு, சனி, வக்கிரம் பெற்றபுதன், சுக்கிரன் ஆகிய இவர்கள் சூரியனிருக்கும் பாகையைவிட குறைந்த பாகையிலிருக்கும் போது சூரியன் உதிப்பதற்கு முன்னும் உதயமாவார்கள் ஆகையால் கிழக்குப்பாகத்தில் காணப்படுவார்கள். சூரியன் கதியைவிட அதிகமான கதியையுடையவர்களான சந்திரன், புதன், சுக்கிரன் இவர்கள் சூரியனிருக்கும் பாகையைவிட அதிகமான பாகையிலிருக்கும் போது சூரியஸ்தமனத்தின் பின் உதயமாவதனால் சூரியாஸ்தமயகாலத்தின் பின் மேற்குப் பாகத்தில் காணப்படுவார்கள். அங்காரகன், குரு, சனி ஆகிய இம்மூவருக்கும் மேற்கில அஸ்தமயமும், கிழக்கில, உதயமுமாத்திரமுண்டு இவர்கள் எப்போதும் எக்காலத்திலும் கிழக்கில அஸ்தமிப்பதே கிடையாது புதன் சுக்கிரன் இவர்களுக்கு மட்டுமே மேற்கு அஸ்தமயமும் கிழக்கு உதயமும், கிழக்கு அஸ்தமயமும் மேற்கு உதயமும் உண்டு.

பிரமஸ்ரீ T. S விசுவநாத சிரௌதிகள் திருக்கணித பஞ்சாங்கத்தில் நிகழும் புரட்டாதிமீ 24-ம் திகதிக்குப் பின் சுக்கிர தரிசனம் காணக்கூடியதென்றும், வாக்கிய பஞ்சாங்கங்களில் ஐப்பசிமீ 5-ம் திகதி உதயமென்றும் கூறப்பட்டிருக்கின்றன ஆனதால் இவ்விரு கணிதங்களுள் எக்கணிதம் பிரத்தியட்சக் காட்சிக்குச் சரியாகக் கணிக்கப்படுவதென்பதைக் கவனித்துக் கைக்கொண்டு அதன்வழி சுபகருமங்களைச் செய்து நலம் உறுவதே எங்கள் கடனாகும்.

நீ. கனகசபை,
யாட்ரேட்,
அநுராசபுரம்.

மஹாத்மா காந்தியடிகளின் 63-ம் ஜெனனதினம்.

சென்ற வெள்ளி (2-10-31) அன்று வலி மேற்குக் குடியானவர் சங்க ஆதரவின்கீழ் எல்லாக் கிராமவாசிகளாலும் ஓர் பகிரங்கக் கூட்டம் தொல்புரம் வளக்கம்பரை அம்மன் கோவிலில் மகாத்மா காந்தியடிகளின் அறுபத்து மூன்றாவது ஜெனனதினத்தைக் கொண்டாடுவதற்காக நடைபெற்றது. அத்தருணம் ஸ்ரீமான் பண்டிதர் க. சிதம்பரநாதன் அவர்கள் காந்திஜீயின் திவ்விய ஜீவிய சரித்திரத்தை உசிதமாகிய தமிழில் கேட்டவர்களெல்லோர்க்கும் நன்கு புலப்படுமாறு ஓர் நீண்ட பிரசங்கஞ் செய்தார்கள்.

"காந்தியார் மகா விஷ்ணுவின் அவதாரம் என்றும், மகா விஷ்ணு முன் அர்ச்சுனற்குச் சொல்லியபடி (இவ்வுலகில் எதும் அக்கிரமம் நடந்தால் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்ய நான் அவதரிப்பேனென்று)இந்த அம்சமாக வந்திருந்து எல்லாச் சீவன்களையும் இரக்கத்துடனும் அன்புடனும் பாதுகாக்கின்றனரென்றும் எச்சாதியினராயினும் எச்சமயத்தவராயினுஞ் சரியே, வித்தியாசம் பாராட்டாது மானிடர் என்ற அந்தவகுப்பில் எல்லோரையும் நடத்துகின்றாரென்றும் மகா விஷ்ணு ஒரு சமயத்தவரால்தான் வணங்கப்பட்டாரென்றும், காந்தியடிகள் எல்லாச் சமயிகளாலும் சாதியினராலும் வணங்கப்படுகின்றாரென்றும், மகாத்மா தமது ஊழிய வேலையைத் தென் ஆபிரிக்காவில் தொடங்கி அங்குள்ள இந்தியர்கட்கு உதவி புரியும் நாளில் தாய் நாடாகிய இந்தியாவில்தான் தம்முடைய ஊழியம் அதிகம் வேண்டியதைக் கண்டு கடல் தாண்டி இந்தியாவுக்கு வந்து சனங்கட்குச் சத்தியத்தினுண்மையையும், சாத்வீகத்தின் பலத்தையும், அஹிம்சா தர்மத்தின் வெற்றியையும், ஒற்றுமையின் நன்மையையும், கடமைகளின் பொறுப்புகளையும் ஐயந்திரிபற உணர்த்தி, தக்ளி, கைராட்டினம் என்னும் தொன்மைவாய்ந்த துணிசெய்யும் சாமான்களையும் புதிதாகவுண்டாக்கி கதராடையைச் சனங்கள் அணியும்படி செய்தனர். இந்தியாவுக்கு சுயராச்சியங் கொடுக்க வல்லமையுள்ளது ராட்டுத்தான், வேறு யாதொன்றும் கொடுக்கமாட்டாதென்றும் பூரண சுயராச்சியத்தை மகாத்மா பெற்றே தீருவாரென்றும் சுயராச்சியம் பெறுமுன்னும், பெற்ற பின்பும் இந்தியாவில் 1 தீண்டாமை ஒழிப்பு, 2 மதுவிலக்கு, 3 இந்து-முஸ்லிம் ஒற்றுமை இம்மூன்றும் ஏற்படவேண்டுமென்றும் சபர்மதி முனிவர் கருதுகிறாரென்றும் பிரசங்கித்தவர் சொல்லி இன்னும் மகாத்மா சென்றதாகிய வட்டமேசைச் சமாஜம் எம்பெருமான் கிருபையால் ஒழுங்காக முடியவேண்டுமென்றும் சொல்லி முடித்தனர்."

பின்பு சங்க அக்கிராசனராகும் ஸ்ரீமான் தேசஊழியன் சேனாதிராசா அவர்கள் எழுந்து திருவாளர் சிதம்பரநாதன் அவர்கள் செய்த பிரசங்கத்தைக் கேட்டு சபையோர் ஆனந்தித்ததையும் பிரசங்கஞ் செய்தவர்க்குச் சபையோர் என்றென்றைக்கும் கடமைப்பட்டிருப்பதாகவும், மகாத்மாவின் காரியங்களெல்லாம் இறைவனருளால் அனுகூலமாகுமென்றும் சொல்லி முடித்தபின் மஹாத்மாவின் ஆயுள் விர்த்தியாகுமாறும் அவருடைய எண்ணங்களெல்லாம் பூரண அனுகூலத்துடன் முடியவேண்டுமென்றும் தேவி முத்துமாரிக்கு ஓர் அபிஷேகம் பூசை அர்ச்சனை எல்லாம் மகாத்மாவின் பெயரால் செய்து சபையோர்க்குப் பிரசாதம் வழங்கப்பட்டது. கூட்டம் 5 மணிக்குத் தொடங்கி 7-30 வரையில் தேவார திருநாமத்துடன் முடிந்தது.

வித்தியா விநோத விவேகம்.

(வண்ணை வை. இ.)

முன் (24-9-31) வெளிவந்தவற்றிற்கு வினாக்காரரனுப்பிய விடைகள்.

1—விநாயகர்

2—65பணம் பெறும் முத்துக்கள்.

விவரம்.

1-ம் தேவிக்கு—5—9-13-17-21
2-ம் ,, 25—4—8-12-16
3-ம் ,, 20-24—3—7-11
4-ம் ,, 15-19-23—2—6
5-ம் ,, 10-14-18-22—1

விடையனுப்பினோர்.

1 செ. வேலுப்பிள்ளை, காரைநகர், 2ம்மாத்திரம்
2 நா. செல்லையா, காவத்தை, 1ம், 2ம் ,,
3 வே. கணபதிப்பிள்ளை, வல்லுவெட்டித்துறை 2ம் மாத்திரம்
4 வ. சு. பொன்னையா, தெகியோவிற்ரு 1ம், 'பல்லி' என்றும், 2ம் 65 என்றும் எழுதினர்.

இரண்டாம் வினாவுக்கு மறுமொழி காணுவதற்குத் காவத்தை நா. செல்லையா பின்வரும் வழியைக் குறிப்பிட்டிருக்கின்றனர்:—

25முத்துக்கும் எத்தனை பணமென்று அறிய 25ஐ 26ல் பெருக்கி 2ல்பிரிக்க மொத்தப்பணம் 325 வரும் இதை ஒரு தேவிக்கு காண்கில் 325÷5 =65பணம்.

இஃதன்றியும் வேறு ஒரு சக்கிரத்தில் முறையே 1முதல் 25 அலகுகளையும் இட்டு, பின் அவைகளில் 1, 2, 4, 5, 6, 10, 16, 20, 21 22, 24, 25, ஆகிய எண்களைக் கோணரேகாக ஆறும் கோடுகளில் அடைத்து பின் கூட்டிப் பார்க்க 65 வரக்கூடியதாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றது.

வினாக்கள்.

வ. சு. பொன்னையா, டெகியவத்தை.

1. மலையிற்பிறந்த சகோதரிகள், மனையில் வாழும் சகோதரிகள், இணைபிரியாச் சகோதரிகள்; ஒருத்தி ஓடி உழைப்பாள், மற்றவள் இருந்துழைப்பாள் இவர்கள்யார்?
2. ஏழு எழுத்தாலாகிய ஒரு ஊரின்பெயர் அதில் 1-ம் 2-ம் 3-ம் 4-ம் ஒரு செட்டியைக் குறிக்கும், 6 ம் 7-ம் வண்ணான்வேலை செய்யுமிடம், 1-ம் 7-ம் முரசைக்குறிக்கும், 1-ம் 4-ம் கடவுளைக்குறிக்கும், 1-ம் 3-ம் 6-ம் ஒரு எண்ணின் பெயர் அது எது?
3. மூன்றெழுத்தாலாகிய ஒரு மரத்தின் பெயர். அதில் முதலெழுத்தில்லாவிட்டால் பெண்களின் ஒருகாலத்தைக் குறிக்கும், நடுவெழுத்தில்லாவிட்டால் கன்னைக்குறிக்கும், கடையெழுத்தில்லா விட்டால் ஒருவாசனைச் செடியைக் குறிக்கும். அது எது?
4. நான்கு திருடர்கள் ஒரு தென்னந்தோப்பில் கொஞ்சம் தேங்காய்கள் களவாடி, ஒரு காட்டுப்பிள்ளையார் கோவிலில் வைத்துவிட்டு நித்திரைபோயினர். இதில் முதலாம் திருடன் முதற்சாமத்தில் விழித்து, அத்தேங்காய்களை நான்கு பங்காய்ப் பிரித்தான். ஒருதேங்காய் மிச்சப்பட்டது. மிகுதிப்பட்ட தேங்காயைப் பிள்ளையாருக்கு உடைத்துவிட்டு, முன்பாகம் பிரித்ததில் சரி ஒருபங்கை எடுத்துப் பிறிதோரிடத்தில் மறைவாக வைத்துவிட்டு நித்திரைசெய்தான். இவனைப்போலவே இரண்டாம் சாமத்தில் இரண்டாந் திருடனும், மூன்றாஞ் சாமத்தில் மூன்றாந் திருடனும், நான்காம் சாமத்தில் நான்காந் திருடனும், தனித்தனியே எழுந்து மீதியாயிருந்த தேங்காய்களை நான்கு பங்கிட்ட பொழுது ஒவ்வொருவர் முறையிலும் ஒவ்வொரு தேங்காய் மீதப்பட்டது. அதைப் பிள்ளையாருக்கு உடைத்துப்போட்டு தங்கள் தங்கள் பங்குகளையும் வேறிடத்தில் மறைத்து வைத்துவிட்டுத் துயின்றனர். விடிந்ததும் எல்லோருமெழுந்து ஒருங்கே பங்குபிரித்தபொழுது மிகுதிப்படாமற் சரியாயிருந்தது. முதலிற் பிடுங்கிய தேங்காய்களெத்தனை?

சரவணை 'நாகேஸ்வரி' மாணவர் சங்கம்.

நிகழும் புரட்டாதித்திங்கள் ௧0-ம் நாள் மாலை ஆறுமணியளவில் சரவணை நாகேஸ்வரிக் கல்வி நிலையத்தில் நாராந்தனையுடையார் திரு. சி. கந்தையா அவர்களது அவைத் தலைமையின்கீழ் இச்சங்கத்து நிறைமதி விரிவுரைக் கூட்டம் தொடங்கிற்று.

மாணவரோருவர் தேவாரமோதினதும் திரு. இ. மருதையனார் அவர்கள் விரிவுரையாளரால் பண்டிதர் திரு. க. சிதம்பாநாதன் (Proctor S C. & N P) அவர்களைப்பற்றி அவையினர் தெரிந்துகொள்ளுதற் பொருட்டுச் சுருங்கிய வோரறிவுறுத்துரை கூறினர். அறிவுறுத்துரைகள் விரிவுரையாளரை யாழ்ப்பாணக் 'காந்தி' யென்று குறிப்பிட்டமை யீண்டுவிதந் தோதற்பாலது.

பின் விரிவுரையாளர்க்கு திரு க. மருதையனார் அவர்கள் மாலையிட்டனர்; விரிவுரையாளர் தெய்வத்தீந்தமிழ்மொழியில் கேட்டார்ப் பிணிக்குந்தகைமை பொருந்த 'நூல் நிலையம்' என்னும் பொருள்பற்றி ஓர் விரிவுரை செய்தனர். நூல் நிலையத்தைப் பற்றிக் கூறுமுகத்தான் தெய்வத்தமிழின் பெருமையையும், சைவசமயத்தினருமையையும், தமிழ்த்தெய்வமாகிய முருகனின் பெருஞ்சிறப்பினையும், சங்க நூல்களின் வனப்பினையும், தொல்காப்பியத்தின் நுண்மையையும் கல்லாரும், கற்றோருமுணரவைத்தனர். நூல்நிலையமாற்ற வேண்டிய கடப்பாடுகளனைத்தையும் வகுத்துக் கூறியமை பெரிதும் போற்றற்பாலது. தமிழின்முன் நிற்றற்கு ஆரியந் தகுதியுடையதன்றென்பதனைப் பல எடுத்துக்காட்டுகளால் நிலை நிறுத்தினர். இவ்விரிவுரை கேட்டாரனைவர்க்கும் மெய்ப்பாட்டினையும், புத்துணர்ச்சியினையுமளித்ததென்ப தொருதலை.

விரிவுரை நிறைவேறியதும் திரு. ஆ. தில்லைநாதபிள்ளை அவர்கள் விரிவுரையாளர்க்கு ஓரிரு செய்யுளால் வாழ்த்துக்கூறினர். நடராஜ வித்தியாலயத் தலைமை ஆசிரியர் திரு. செ. கனகசபாபதிப்பிள்ளை அவர்கள், சங்க அமைச்சர், திரு. வ. சோமசுந்தரம்வர்கள், திரு. இ. மருதையனார் அவர்கள் என்னும் நால்வரில் முதலிருவர் குறிப்புரையும் பின்னிருவர் குறிப்புரையோடு நன்றியும் கூறினர். மாணவரோருவர் தேவாரமோதக் கூட்டமினிது முற்றுப்பெற்றது. காரியதரிசி.

“நோன்பென்பது கொன்று தின்னாமை”

(முற்றொடர்.)

எல்லா வுயிர்களையுங் கடவுள் படைத்துக் காக்கின்றார். அவைகளை யிரக்கமின்றிச் சதறப் பதறக் கொன்று அவற்றைப் புசிப்பது ஆண்டவன் கட்டளைக்கு முழுவிரோதமன்றோ? ஆதலால் தனக்குக் கீழ்ப்பட்டதென்று தான் கொலைபுரிவது போன்றே தனக்கு மேற்பட்ட எவராலுந் தான் கொலையுண்ணப்படுவது சத்தியமன்றோ?

தாயுமான சுவாமிகளுந் தமது பராபரக் கண்ணியில்

“கொல்லாவிரதங் குவலய மெல்லா மோங்க எல்லார்க்குஞ் சொல்லுவது என்னிச்சை பராபரமே” எனவுங் கூறியுள்ளார்.

இதுமட்டோ: நல்லிசைப் புலமைவாய்ந்த திருவள்ளுவரும்,

“கொல்லான் புலாலைமறுத்தானைக் கைகூப்பி
எல்லாவுயிருந்தொழும்” என்றும்,

“தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான் பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.”

என்றும் கூறியிருக்கின்றார்.

புலாலுண்பதை யொழித்தால் அவ்வழியாகக் கொலைபுரிவதுந் தானேயொழிந்துவிடும். தெரியாக் காலத்துச் செய்திடினும் இது பாவமென்றறிந்தவுடனுவது விலக்கப்படுவதே மிகவும் நல்லதாகும். கொலை செய்பவனிடம் போசனஞ் செய்யக்கூடாதென்பதும் புலாலுண்பவனிடத்திற் போசனஞ் செய்யக்கூடாதென்பதும் “பதிபசு பாசவிளக்கம்” என்னும் நூலிற் சொல்லப்பப்பட்ட இப்பாவா லினிதுவிளக்குகின்றது.

“கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பேரமுதமாகும், கொலையுளா னுதவு மன்னங் கூறில்லவ் விடமதாகும், புலையர் தம் மனையி லுண்போன் புலையனு மாறுபோல, கொலைஞர்தம் மனையிலுண்போன் கொலைஞனே யாவனன்றே”

இதுபற்றியன்றோ ஓர் பகுதியாரை இழிகுலத்தாரெனக் கூறப்படுகின்றது.

கொலை செய்பவர்களும் புலாலுண்பவர்களும் நரகத்திற் கிடந்து வருந்துவார்களென்பதற் கறிகுறியாகவும், அவர்களுக்கு அவ்விதமன்னிப்புக் கிடையாதென்பதும் மேற்கூறிய, “பதிபசு பாசவிளக்கம்” என்னும் நூலிற் கூறப்பட்ட இவ்விரு பாக்களாலுமறிக:—

“நம்மா வெனவுற வாருயிரைக் கொன்றருந்தி, யிம்மானுடரெல்லா மின்புற் றிருக்கின்றார், அம்மா வெனுஞ்சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும், பொய்ம்மா நிரய மென்றூற் புசித்தவர்க்கென் சொல்லுவதே,” என்றும்,

“கங்கையிற்படிந்திட்டாலுங் கடவுளைப் பூசித்தாலும், மங்குல்போல் கோடிதானம் வள்ளலாய் வழங்கினாலும், சங்கையில் லாதனூனந் தவமுணர்ந்திட்டாலும், பொங்குறு புலால் புசிப்போன் போய்நர கடைவனன்றே.”

நாம் புண்ணியத்தை மேலிட்டுவதற்காய் எடுத்த இம்மானுடப் பிறப்பிலே பாவத்தை மேலிட்டுவதாயிருந்தால், “குளிக்கப்போய்ச் சேறு பூசுவதாகின்றதல்லவா.”

கற்றபெரியீர்! சகோதர சகோதரிகாள்!! நாம் ஒன்றைக் கற்று அதேவாறாய் நடத்தலன்றோ முறை. “கற்க, கசடறக் கற்க, கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக” என்னுந் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க நீவிர் நமக்கு நன்மைபயக்கக்கூடிய தெல்லாவற்றையு மனுசரிப்பதன்றோ முறை. இது விஷயமாகக் கற்றறிந்த பெரியோரும் மற்றையோருந் தங்கள் தங்கள் கிராமங்களில் சங்கங்கள் கூடி அவற்றில் இப்பேர்ப்பட்ட உலக நன்மைக்கான புண்ணிய விஷயங்களைப்பேசி ஏழைச்சனங்களுக்குப் புத்திபுகட்டுவதன்றோ பெரும் புண்ணியம். மாணவர்களெல்லாருந் தங்கள் உறவினர் சுற்றத்தவர்களோடு கூடித் தங்கள் கிராமங்களில் சபைகள் கூட்டி இப்பேர்ப்பட்டவிஷயங்களில் பிரசங்கங்கள் செய்தல்வேண்டும். பிரசங்கஞ் செய்வதோடமையாது வீட்டுக்கு வீடுசென்று புலாலுண்ணலை நிறுத்துதல்வேண்டும். பத்திரிகாசிரியர்களும், உபாத்தியாயர்களும் இதைப் போதித்தல் வேண்டும்.

“கொலை” யென்பது சைவசமயக் கொள்கைக்கு நேர் விரோதமானதென்பதைச் சைவசமயத்தோருமன்றி எமது சமய நூலாராய்ச்சி செய்த மறசமய கலைநிபுணர்களுமறிவர். ஆதலால் கோயில்களிற் பலியிடுவதுஞ் சைவசமயக் கொள்கைக்கு நேர் விரோதமே. இஃதிவ்வாறிருப்பவும் சில பிறசமயகலை நிபுணர்கள் தாம் வேதா வேதாகமங்களெல்லாவற்றையு மறிந்துவிட்டோமென்று பிரசங்க மேடைகளிலேறிக் “கோயில்களிற் பலியிடுதல் சைவசமயக்கோட்பாடுகளுள் ஒன்று” எனக் குதர்க்கம் பேசி எடுத்த விஷயத்தை இனிது விளக்காது இடையில் விடுத்துத் தங்கள் நூலாராய்ச்சியை விளக்குவதுமன்றி தம் மனத்தையும், செயலையும், கல்வியறிவையுங் காண்பிக்கின்றார்கள். இவ்வாறான செயல்களால் இவர்கள் நோக்கம் நன்கு விளங்கும். ஜனங்களின் நன்மையைக் கருதுவோரும், அவர்களுக்கு உதவி செய்வோரும் நற்புத்தி புகட்டுவோரு மிவர்கள்போன்ற நிபுணர்களேயாவர்.

அறிவான்மிக்க பெரியீர்! இங்கிலாந்தில் ஸ்ரீமான F. L. ஹன்ட் என்பவர் பட்சிகளுக்கென்று ஓர் கிராமத்தை இப்பொழுது நிர்மாணஞ் செய்திருக்கிறாராம். இதில் நீர்குடித்தற்குக் குளம், ஒரு கோயில், சிறிய வீடுகள் முதலியன அமைக்கப் பட்டிருக்கின்றனவாம். கூடு கட்டுவதற்கு வைக்கோல், கம்பளி நூல் முதலியனவும் வைக்கப்பட்டிருக்கின்றதாம். பட்சிகளுக்கென்று தனியான ஒரு சாப்பாட்டுக்கடையும் ஆசுபத்திரியு மமைக்கப்பட்டிருக்கிறதாம். இப்பெரியாரின் அன்பு இருந்தவாறென்னே. இதை எம்மவர்களும் பின்பற்றி எல்லாவுயிர்கள்மீது மன்பு பாராட்டிக் காப்பாற்றவேண்டுமென்றே இவை வரைந்தனம்.

வே. பொ. சிற்றம்பலவாணர்,
தலையாழி, யாழ்ப்பாணம்.

[illegible]
சுதேசத்துணிகளின் ஆதரிஷங்கள்
ஸ்தாபிதம் 1900
புதிய கேட்லாக் இனாம்!
கே. எஸ். முத்தையா கம்பெனி
சில்க் அவுஸ், காசி.

(Y. 19 28 9 31 to 27 9 32)

மேகராஜாங்க எண்ணெய்.

ரசம், சீரம், பூரம், பாஷாணம், தேர்வாளம், முதலியவைகள் கலப்புக்கிடையாது.

இது ஒரேமருந்து; எல்லாவியாதிகளையும்போக்கும். வெட்டைகள், மேகச்சூலைகள், சூலைகள், கிரந்திரோகங்கள், பெருஞ் சிரங்குகள், சொறிசிரங்குகள், மேகச்சல், மேகப் படை, மேக வாதல், செம்மேக தடிப்புகள், கருமேக தடிப்புகள், மூட்டுக்குழட்டு குத்தல், குடைச்சல், வீக்கம், பற்பல வாய்வுகள், ஸ்திரீ ருதுகக்கட்டு, கெர்ப்பந் தரிக் காமல் செய்யும் கெடுதிகளை யெல்லாம் சுகப்படுத்தும்.

மேகராஜாங்க எண்ணெய் சீசா 1-க்கு ரூபா 2—8—0.

வி. பி. வேறு.

K. V. வாப்பாதுரை & Co.,
பறங்கிப்பேட்டை.

(Y. 18. 28-9-31 To 27-9 32)

சைவத்திருநெறித் தோத்திரத்திரட்டு

சைவசமயிகள் பாராயணஞ் செய்தற்கும், சைவவித்தியாசாலைகளிற் சமயபாடமாக உபயோகித்தற்கும் பயன்படும் வண்ணம் இத்தோத்திரத்திரட்டு நவமாகத்தொகுக்கப் பெற்றுள்ளது. இதன்கண் அகத்தியர் தேவாரத்திரட்டு (முழுவதும்) திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், பட்டினத்தடிகள் திருப்பாடல், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, தாயுமானவர்திருப்பாடல், முதலியன முறையே தொகுக்கப்பட்டுள்ளன. மேலும் விநாயகக்கடவுள், சிவபெருமான், நடராசர், தக்ஷிணாமூர்த்தி, வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், அரிகரபுத்திரர், (ஐயனார்). சிவசத்தி, சிவகாமியம்மை, துர்க்கை, இலக்குமி, சரசுவதி, திருநந்திதேவர் முதலாம் மூர்த்திகளுக்கும், சமயகுரவர்க்கும் சூரியமூர்த்திக்கும், சண்டேசுவாருக்கும் உரிய தோத்திரங்கள் மரபாக வகுக்கப் பெற்றுள்ளன. இதனை ஒரு பூரணமான தோத்திரத்திரட்டெனச்சொல்லலாகும். 128 பக்கங்கள் வரையிற் கொண்டது. 470 அருட்பாக்களைக்கொண்டது. சாதாரணகட்டு விலை சதம் 30 (அணு 5.) தடித்த மட்டையோடு கூடிய கட்டு சதம் 40. பிரதிகள் இந்துசாதன ஆலயத்திற் பெறற்பாலன. தபாற்செலவு வேறு.

வண்ணார்பண்ணை, } மனேஜர்.
இந்துசாதனாலயம்.



தாமே பாவித்துக் கொள்ளக்கூடிய 8வகையான மருந்துகள் இதில் அடங்கியுள்ளன.

ஒரு பெட்டியின் விலை ரூபா 3 அணு 8.

லிட்டில்ஸ்
ஒறியென்டல் பாம் விற்குமிடம்:
பெரியதெரு,
மணிக்கூட்டுச்சந்தி,
கொழும்பு.
(தபால்பெட்டி இல. 298.)
அல்லது
லிட்டில்ஸ்
ஒறியென்ரல் பாம் & பார்மசியூரிக்கல்ஸ்
லிமிடெட்
தபால் பெட்டி இலக்கம் 67,
சென்னபட்டணம்.

Y 9. 1 31—12 32.)

வெளிவந்து விட்டது!
உலகம் பலவிதம்—௩;
துரைரத்தினம்—நேசமணி.

இதகாமும் வெளிவந்தவற்றுள் இதுவே சிறந்த கதையாம். வாசிக்கவாசிக்கத் தெவிட்டாதது.

“கிளேஸ்” பதிப்பு பிரதி 1. விலைசதம் 60.
“றவ்” „ „ „ 50.

உலகம் பலவிதம்—௪;
கோபால—நேசரத்தினம், விலைசதம் 75
உலகம் பலவிதம்—௨
காசிநாதன்—நேசமலர் விலை சதம் 30.

ம. வே. திருஞானசம்பந்தன்,
வண்ணார்பண்ணை.

(Mis 347.)

சைவக்கிரியை விளக்கம்.

—.o:—

சைவசமயக் கிரியைகளின் இயல்பையும் அவற்றைச் செய்யும் முறையையும், செய்வதற்குக்காரணத்தையும் இந்நூல் தெளிவாக எடுத்துக் கூறுவது. சைவசமயவியல், கிரியையுறுப்பியல், தீட்சையியல், விவாகவியல், கோயிலியல், அபரக்கிரியையியல் என ஆறு இயல்களைக் கொண்டுள்ளது. இதனை இலகுவான தமிழ் வசனநடையில் எழுதியவர் ஸ்ரீ சு. சிவபாதசுந்தரமவர்களேயாம். இதன் விலை சதம் 25 (அணு ௪) இந்துசாதன ஆலயத்திற் பெறலாகும்.

மானேஜர்,
இந்துசாதனம்.

வண்ணார்பண்ணை,
1—10—31.

The Prudential Assurance Co., Ltd.

புறுடென்ஷல் வீமாக்கொம்பனி.

1930-ம் ஆண்டின் கணக்கால்

ஆதாய நன்கொடை.

வீமாத்திர்ந்த ஒவ்வொரு 1000ரூபாவுக்கும் பூரண ஆயுள் வீமாக்களுக்கு (Whole Life Policies) ரூபா 26/- வீதமும், தவணை குறித்த வீமாக்களுக்கு (Endowment Policies) ரூபா 23/- வீதமும் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு வருஷமும் இத்தகைய பெரும் தொகையான ஆதாய நன்கொடைகளைக் கொடுக்கக்கூடியதும் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் மிகப் பெரியதுமான இக்கொம்பனியில் 2,61,00,000 பேர்கள் உரித்தாளராய்ச் சேர்ந்திருந்து மேற்கூறிய ஆதாயங்களில் பங்குபற்றிவருகிறார்கள். தாமும் அவர்களுடன் சேர்ந்து ஆதாயம் அடையவிரும்பின் விபரங்களுக்கு உடனே எழுதவும்.

டெல்மீஜ் போர்சைத் அன்ட் கோ., லிமிட்டட்.

பிரதான ஏஜண்டுகள், கொழும்பு.

Principal Agents in Ceylon, Delmege Forsyth & Co Ltd., Colombo.

(Y. 11. 19 to 31-12-31) வி.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.